உ

# திருப்போரூர் கந்தசாமி கீர்த்தனம்

முருகன்றுணை

வித்துவான் காஞ்சீபுரம்

# சபாபதிமுதலியாரவர்கள்

மாணாக்கர்-புரசை-அஷ்டாவதானம்

## சபாபதிமுதலியார்செய்த

# சிறப்புப்பாயிரம்.

நிலைமண்டில-ஆசிரியப்பா.

புகழ்மலிதாரகப் பொருப்பகழுத்த
திகழ்நெடுஞ்சாரற் செறிமாண்பமைதருந்
திருப்பதிகண்ணுவ வருட்டகைபூசித்
தொருப்படுமனத்தி னுற்றுறைநெடும்பதி
செந்தாமரைமலர் நந்தாவாழ்க்கைத்
திருமானென்னு மொருமான்மழைக்கைச்
சிவமுனிமுதலோர் பவநெறிகடப்பான்
போற்றிப்பழிச்சும் பொருவிலாவளம்பதி
மூர்த்தியமுதலா மூவகைச்சிறப்புஞ்
சீர்த்துறநிலைஇய செழும்பதிதெய்வச்
சந்நிதிமுறையெனும் நன்னிதியெவர்க்குந்
தந்தருள்சிதம்பரத் தக்கோன்கரி[illegible]லாப்
புந்திவிட்டகலாப் பொலன்பெறுநெடும்பதி
வள்ளையாரோடை வண்மைகூர்வான்பதி
யொள்ளொளிவிரிக்கு முயர்மணிச்சிநகரப்
பொரூர்ச்செவ்வேள் புனையிழைப்புனமான்
காரூர்மகவர்ன் களிதலைசிறப்பத்
தனையெயனவந்த கலைகடவுட்பிடி
யிருபால்தழுவவீற் றிருந்தருள்பெருமான்

# சிறப்புப்பாயிரம்.

சீர்த்தனபதிகஞ் சிளர்பிரணவகிரி
யாத்தனருள்வா லாம்பிகைபாக
மியல்வுறுஉந்தியாக கைலாயநாதர்
நயனுறுபெயர்திகழ் நல்லிசைக்கீர்த்தனை
பதிகமின்னன பகர்ந்துவான்றெய்வ
நதிகுலோத்துங்க நண்பனிசைத்தமிழ்
மதிஞனிரிசப்ப மகிபனீன்ற
அதிபன்தாயு மானமித்திரன்
கேட்டுக்கொண்ட கேண்மையிற்பதித்து
மாட்சியினெவரு மகிழ்வுறநல்கினன்
கல்விச்சங்கஞ் செல்வநீண்மாளிகைத்
திருவநீள்சென்னைப் பெருநகருறைவோன்
பைந்தேன்சிரகப் பனிமலர்த்தாரினன்
ஈழக்குலமணி ஏனாதிநாயனார்
வாழ்விற்பெருகு மரபெனுங்கடலி
னுதித்தகற்பகம் ஓவாநெல்வயல்
கதித்தமுகையூர்க் காவலன்புகலுந்
தியாகராயத் திணிதருங்குவவுப்
புயாசலன்பயந்த மாதவப்புதல்வன்
முத்தமிழ்த்தேர்ச்சி முதுக்குறையகலா
வித்தகர்தம்பால் விழைவுகூர்தோன்றல்
தெய்வவழிபாடு சீர்சால்நியமங்
கைவருபத்திமை கடைப்பிடித்தோங்கு
நன்மையெனும்பயிர் நாளுந்தழைப்பத்
தொன்மைசேர்வாய்மைத் தூநீர்ப்பாய்ச்சி
வளர்க்குந்திறலினன் மலர்மகள்மனையெனக்
களிக்குமெவ்வளனும் கனிதருமெழிலினன்
பொற்புநீள்தற்புகழ் வைப்பிடைநிலைபெறக்
குப்புசாமிக் குரிசிலுண்மகிழ்ந்தே.

முருகன் துணை.

# சார்த்துக்கவிகள்.

புதுவை

## க-சுப்பராயமுதலியார் இயற்றிய

அறுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.

போரூரின்வளர்கந்தசாமிதிருவடிமலர்க்குப்
பொருந்தநெஞ்சி
ஞாரக்கீர்த்தநம்பற்பதிகமிவைநாவலர்கண்
டுவப்பச்செய்தான்
சீராருஞ்சென்னைபுரித்தியாகராயக்குரிசில்
செய்தநோன்பி
னேராருஞ்செம்மல்குப்புசாமியெனும்புலமைமிகு
மினிமையோனே.

புரசை

## முருகப்பவுபாத்தியாயர்-இயற்றிய

எழுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.

குவலயம்பரசுந்திருத்தகுபோரூர்க்
குமரன்செங்கடம்பலர்புனைவா
குவலயப்புயமேற்கீர்த்தநமுதற்பாக்
கோவையைக்கோத்துச்சாத்தினன்வேற்
குவலயக்கருங்கண்வாணிவிஞ்சயர்பண்
கூர்கடல்குளிக்கச்சென்னையிற்றங்
குவலயக்குபேரனிகர்முகமலர்பு
குப்புசாமித்தமிழ்வலனே.

### குறுங்கழிநெடில் விருத்தம்.

சொல்லுமுனமேசுகவுதயந் தோன்றவெவருமைம்புலனை (ன்
வெல்லுநெறியின்வழிதிறந்து மெய்ஞ்ஞானப்பேரொளிகாண்பா
புல்லனைசப்புத்தேளின் போரூரான்கீர்த்தநம்பதிகம்
நெல்லியெனக்கைசென்னைபுரிக் குப்புசாமிநிகழ்த்தினனால்.

---

புரசை-அஷ்டாவதானம்

சபாபதிமுதலியார்-இயற்றமிழ்மாணாக்கர்

## திரு-சின்னசாமிபிள்ளை இயற்றிய

### அறுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.

திருப்போரூரிரதமிசையிருந்தவண்ணந்தினகரனை
 மறைத்துத்தற்சேர்ந்
திருப்போரூருகளினைத்துமகற்றியருளெழிலிவண்ணன்
 மருகனெங்கோன்
திருப்போரூர்க்குகனடிகட்கிசைத்தமிழாந்தேமாலை
 புனைந்தானெற்க
திருப்போரூர்மதியளவுமுகையூர்க்குப்புச்சாமி
 செல்வன்மாதோ.

### இதுவுமது.

சிரகத்தாரோனுதிநாயனார்மரபில்வருந்
 தியாகராய
நிரனுயர்தவப்புதல்வனெழிற்குப்புசாமியெனுஞ்
 செம்மலுள்ளான்
பாரவருட்டியாகசைலாசர்வாலாம்பிகையென்
 னன்னைபேரில்
எருறக்கீர்த்தனைபதிகமியம்பினன்அறிஞர்மகிழ்
 வெய்தத்தானே.

உ

கணபதிதுணை.

# திருப்போரூர்
# கந்தசாமிதோத்திரம்.

## விநாயகர் துதி.

வெண்பா.

ஆனைமுகனே அருளங்கரத்தோனே
வானவர்கள்கோன்புகழும் வள்ளலே-கானமயில்
வேலனுக்குமுன்னுதித்த வித்தகனேபாடவரம்
பாலனுக்குத்தந்தருட்கண் பார்.

## பரசிவவணக்கம்.

கலிவிருத்தம்.

அகாரவாச்சிய மாயுலகாக்கிமுன்
உகாரவாச்சிய மாயுயிர்காத்துமா
மகாரவாச்சிய மாயவைமாற்றியாள்
சிகாரவாச்சியன் சேவடிபோற்றுவாம்

பராசத்திவணக்கம்

கலிவிருத்தம்.

கண்ணொளிகதிரொளி கரந்துதோன்றல்போல்
கண்ணுதற்சிவனொடு கலந்துநின்றுமே
எண்ணில்பல்லுயிரையு மீன்றவன்னையை
எண்ணியுள்ளுருகியே யேத்துவாமரோ

வேம்படிவிநாயகர்வணக்கம்

கும்பமுலைவள்ளிதெய்வ குஞ்சரிமணாளர்
எம்பரமர்கீர்த்தன மியம்பவுயர்போரூர்

உம்பர்தொழுதிம்பதிழ லும்பல்வதனத்தன்
வம்பவிழ்பதத்துணை வருந்துணைவிநாத்தே.

ஆறுமுகசாமிவணக்கம்.

அறுசீர்க்கழிநெடில்.

ஆறுமாமுகனேபோற்றி அம்பிகைபாலாபோற்றி
ஏறுமாயூராபோற்றி ஈசர்தேசிகனேபோற்றி
மாரசூர்க்காலாபோற்றி வானவர்கோவேபோற்றி
வீறும்போரூராபோற்றி வேலனேபோற்றிபோற்றி.

தெய்வயானை வள்ளியம்மைவணக்கம்

கொச்சகக்கலிப்பா.

வானமகிழ்ந்திரன்பால் வனசரர்கோன்பால்வளர்ந்த
ஞானவடிவேற்போரூர் நாயகனுர்பன்னிருதோ
ளானமலைதழுவிவிளை யாடுமந்தெய்வானையையும்
பானல்விழிவள்ளியையும் பணிந்தருளின்பம்பெறுவாம்.

நவவீரர்வணக்கம்

கட்டளைக்கலிப்பா.

வீரசூரன்விரும்பிமுன்னல்கிய வீரபானுகோபன்புவிமேல்விழ
வீரவாளிற்வெட்டிச்செயித்தருள் வீரவாகுநல்வீரமகேந்திரன்
வீரகேசரிவீரபுரந்தரன் வீரராந்தகல்வீரதிவாகரன்
வீரராக்கதன்வீரமகேசன்மா வீரதீரனைமேவிப்பணிகுவாம்.

நால்வர்வணக்கம்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சமயவாதியர்தேறச் சுட்டிக்காட்டிச்
சங்கரனேபரமெனுஞ் சம்பந்தர்பொற்றாள்
அமணரிடுங்கற்றூணைத் தெப்பமாக்கி
ஆழிகடந்தருட்களாகே ரப்பர்நற்றாள்
இமயவரோதும்பரவை யார்க்குத்தூதா
இறையவனையேவியசுந் தரரொழிற்றாள்
மமதைபுறம்புத்தர்களை வாதில்வென்ற
மாணிக்கவாசகர்தாள் வாழ்த்திவாழ்வாம்.

அறுபத்துமூன்றுநாயன்மார் வணக்கம்.

கலிவிருத்தம்

தேவர்போற்றுஞ் சிவன்றிருத்தொண்டினை
ஆவலாற்செய் தருள்வெள்ளமூழ்கியே
ஓவரும்பதத் துற்றவறுபத்து
மூவர்பாதம் முடியினிற்சூடுவாம்.

அகஸ்த்தியர் நக்கீரர்-அருணகிரிநாதர்வணக்கம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கருங்கடலையுண்டுதமிழ்க்கடலின்மூழ்கிக்
கருக்கடலைநீந்தியருட்கடலாயோங்கி
யருங்கடத்திற்றோன்றுகுறுமுனிவன்சீர்சா
லணியாற்றுப்படைசொலுநக்கீரதேவ
னிருங்கடமாமுகற்கிளையஎந்தைமீதைந்
தியல்கொடிருப்புகழொடநுபூதியோதிப்
பருங்கடம்விட்டொழிந்துசுகவடிவாய்வேளைப்
பணியருணகிரிநாதன்பதந்துதிப்பாம்.

திருப்போரூர்-சிதம்பரசாமிகள்வணக்கம்.

நிதம்பரமதத்தரு நின்றிறைஞ்சிப்பல்
விதம்பரவியவடி வேலனுண்டருள்
சதம்பெறுசுகந்தருஞ் சமரமாபுரிச்
சிதம்பரசாமியைச் சிந்தைசெய்குவாம்.

குருவணக்கம்

எழுசீர்க்கழிநெடில்

கோசிகமுடிவே மானிடவடிவாய்க்
கொண்டதென்சிவப்பிரகாச
தேசிகன்றிருத்தா ணிழலினிற்குலவிச்
செழிக்குமெய்ச் சுந்தரானந்தன்
பேசிகலறத்தத் துவமசிப்பொருளைப்
பெருங்கருணையி னெனக்களித்த

மாசிகற்தொளிர்செய்யூரமர்பரமா
னந்தனைவாழ்த்தி யேத்திடுவாம்.

அவையடக்கம்-கலிவிருத்தம்

திருவளருந் திருச்சமராபுரி
முருகன்கீர்த்தனம் யான்மொழிந்தேனலேன்
உருகவுள்ளிருந் தோதிவைத்தானவன்
இருநிலத்தினி லின்கவிவாணரோ.

தருசரி-கண்ணிகள்.

சடாக்ஷரவருக்கைமாலை சாத்றமெய்யன்பர்தம்மைக்
கடாக்ஷம்வைத்தாளுமுக்கட் கணபதிகாப்பதாமே.
அச்சுதன்பிரமன்விண்ணோ ரருந்தவருச்சித்தேத்துஞ்
சச்சிதானந்தமோன சரவணோற்பவனேபோற்றி (௧)

ஆக்ஷியாயெவ்வுயிர்க்கு மானந்தபூர்த்தியாகிச்
சாக்ஷியாயெங்குந்தோன்றுஞ்சரவணோற்பவனேபோற்றி (௨)

இபமுகற்கிளவலான எந்தையேயநந்தங்கோடி
தபனனைநிகர்த்தசோதி சரவணோற்பவனேபோற்றி (௩)

ஈசருக்குபதேசித்த விறைவமெய்த்தொண்டுபூண்ட
தாசரையாட்கொள்ளுஞ் சரவணோற்பவனேபோற்றி (௪)

உண்மைமெய்ஞ்ஞானாநந்த வுருவமேயருவாயோங்கிச்
சண்மததெய்வமான சரவணோற்பவனேபோற்றி (௫)

ஊனுடலுலவுஞ்சீவ னுற்றவிவ்வுலகந்தோறுந்
தானறிவின்பாய்நின்ற சரவணோற்பவனேபோற்றி (௬)

எத்தெய்வங்களுக்குமேலாயிருக்குமெய்த்தெய்வமென்றே
சத்திவேற்கையிலேத்துஞ் சரவணோற்பவனேபோற்றி (௭)

ஏலமார்கூந்தற்றெய்வ யானையும்வேடர்மானும்
சாலவேதழுவுந்தோளா சரவணோற்பவனேபோற்றி (௮)

ஐங்கரன்போதன்கண்ண னரன்மகேசுரன்மெய்ஞ்ஞான
சங்கரனுகிவந்த சரவணோற்பவனேபோற்றி (௯)

ஒருமுதலாகியார்க்கு மூவத்துசம்பதிதைமெல்லாந்
தருமுருகையனேஓம் சரவணோற்பவனேபோற்றி (௰)

ஓவருப்பொருளேவேத வுருவமேயண்டமெல்லாந்
தாவடிமயின்மேலேறுஞ் சரவணோற்பவனேபோற்றி (௰௧)

ஔவியநிறைந்தவென்னை யாள்வதுன்பரஞ்சட்கோண
சௌவுந்ஹ்ரீங்காரமான சரவணோற்பவனேபோற்றி (௰௨)

## மங்களம்

ஆனைமுகற்கிளைய ஆறுமுககுகனே
மங்களம்-ஜெய-மங்களம்
வானவர்தொழும்போரூர் வடிவேல்முருகனே
மங்களம்-ஜெய-மங்களம்
வள்ளிதெய்வயானை மணாளாபன்னிருதோளா
மங்களம்-ஜெய-மங்களம்
வெள்ளிமலையோனருளும்புள்ளிமாயூரசெம்பிரா
மங்களம்-ஜெய மங்களம்
கும்பமுனிக்குபதேசங் கூறுஞ்சற்குருபரா
மங்களம்-ஜெய-மங்களம்
உம்பர்சிறைதீர்த்தஞானசம்பந்தஎம்பெருமானே
மங்களம்-ஜெய-மங்களம்
குப்புசாமிநிதந்துதி செப்பிடுபாதாம்புயனே
மங்களம்-ஜெய-மங்களம்
ஒப்பில்கைலாசநாதர் அற்புதகுமாரகுரு
மங்களம்-ஜெய-மங்களம்

உ

சிவமயம்.

# விநாயகர்கீர்த்தநம்.

இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

பல்லவி.

கணநாதாநமவே-ஓம்-ஹாசரசிவசுத

கணநாதாநமவே

அநுபல்லவி.

மண மாமலர்ப்பொழிற் போரூர்மாநகர்

வாழ்முநிவரிறைஞ்சிடும்ப நீடூழிவாழ்துறைஜெய-கணநா

[சரணங்கள்]

பத்திசெய்திட வடியேன் நாணுனைப்

பாடிடவே யடியேன்

பத்தனாத்தொழ வடியேன்-நின்புகழ்

படித்திடவே யடியேன்

முத்துக்குமாரசங் கீர்த்தநஞ்செய்யவருள்

மூஷிகவாகன முராரிமருகஜெய- கணநாதா

மலமகன்றிடக் குருவாய்-எனதுள்ளாய்

மகிழ்நீயென்முன்வருவாய்

பலகலைப்பொரு ளுருவாய்-என்றுவினித்

பாடிடவரந் தருவாய்

உலகிலுள்ளவுமோர் குறையின்றிவாழ

உதவிசெய்யிறுதகி மதகெஜமுகஜெய - கணநாதா

வல்லபையின் மணாளா-திகழ்செந்தா

மரைமலர்த் திருத்தாளா

எல்லையில்கிருபை யாளா-அநுதினம்

எத்துமென்றனையாளாய்

சொல்லினிக்வல்லவர் நல்லவர்இன்புறச்

சொற்றமிழ்செய்புக்குப்பு கவாமிக்குதவுஞ்ஜெய- கணநா

உ-திருவொற்றியூர்-தியாகேசர்-கீர்த்தநம்.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஹரஹரஓம்சிவ ஆநந்தத்தாண்டவ
ஆதிபுரிவாழ்தேவா மஹாநுபாவா

அநுபல்லவி.

மரகதவடிவன்னை மருவும்இடதுபாகா
மறையோரிருவர்க்குமுன்மாணிக்கந்தந்ததியாகா-ஹரஹ

[சரணங்கள்]

காமதகனுவளர் கங்காதராதிரிபுரா
காலனையுதைத்தகரு ணாகராதிவாகரா
சாமவேதசிரவண தற்பராசங்கரா
சர்வபரிபூரண தயாபராபஞ்சாக்ஷரா-ஹரஹ

பதஞ்சலிஅம்புலிபோற்றும் பாதனேஅநீதனே
பணிந்துநால்வர்பாடும் போதனேசதுர்வேதனே
இதஞ்செய்யெவர்க்குஞ்சங் கீதனேவிநோதனே
எண்ணுமறுபத்துமூவர் நாதனேபிரக்கியாதனே-ஹர

சுந்தரர்க்குத்தூதுசென்ற தூயனேஉபாயனே
சுருதியநந்தஞ்சொல்செவ் வாயனேசிவாயனே
சுந்தரமும்வடிவன்னை நேயனேஆகாயனே
தமியன்குப்புசுவாமி சகாயனேகயிலாயனே-ஹர

திருவொற்றியூர்-வடிவுடையம்மைபேரில்-கீர்த்தநம்.

---

ங-இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

வடிவுடைத்தாயே-வந்தருள்வாயே
வடிவுடைத்தாயே

அநுபல்லவி.

அடியர்போற்றுந்திரு வொற்றியூரிற்றிகழும்
ஆனந்தத்தாண்டவத் தியாகர்மனமகிழும்-வடி

[சரணங்கள்]

பாரிருந்தாற் பின்னை பார்ப்பவராரா் என்னை
ஏராருமென் அன்னை எனநம்பினேனுன்னை - வடி

துன்பவினையால்நைந்து சோர்ந்தேன்மனமெலிந்து
அன்புடனேபரிந்து ஆதரிப்பாய்மகிழ்ந்து- வடி

மங்கையர்மோகங்கொண்டு மயங்காதின்பமுதுண்டு
செங்கமலப்பதங்கண்டு செய்வேனுன்னடித்தொண்டு- வடி

காலன்வருவானென்று கலங்குந்துயரைவென்று
சீலமாயுன்முன் நின்று தெரிசனஞ்செய்யஇன்று- வடி

வள்ளிதெய்வயானைமாமி வணங்குஞ்சகஸ்திரநாமி
புள்ளிமயி லேறுஞ்சாமி புண்ணியனைப்பெற்றவாமி- வடி

மகிஷாசுரசம்ஹாரி மரகதாங்கிகௌமாரி
மகாமந்திரவோங்காரி வாழ்த்துவோர்க்குபகாரி- வடி

எப்புவியும்புகழ்நீதி இமையோரோத்தும்அநாதி
குப்புசுவாமிதமிழோதிக் கும்பிடும்பரஞ்சோதி-வடி

---

வேல்கீர்த்தநம்.

ச-இராகம்-தோடி-தாளம்சாப்பு

பல்லவி.

வெற்றிவேலுற்றதுணையிருக்க மனமே
வீணுயேனலைகிறாய் தினமே

அநுபல்லவி

முற்றுமறையுணர்ந்த முனிவருமன்புகூர்ந்து
நற்றவஞ்செய்யும்போரூர் நாதன்கரத்திலேந்தும்- வெற்

[சரணங்கள்.]

புதக்கவிழுத்தள்ளித் துணிந்து-நக்கீரர்
பொருட்டாயிரம்பேர்துயர் தணித்து

ஆதரவாய்முருகு காற்றுப்படைக்குவந்த
அற்புதமுருகேசன் அஸ்தத்தில்வந்திருந்த - வெற்றி

சுரர்முதலனைவரும் வேண்ட-எங்கள்
சுப்ரமணியன்முனந் தூண்ட
விரைவாகச்சென்றந்த வெம்படையொடுநின்ற
வீரசூரர்களென்ற வேரறவேவென்ற-வெற்றி

தனிவழிச்சென்றுலுந்தொடர்ந்து-எந்தத்
தருணத்துமுன்னிற்கும்அடர்ந்து
கனிவாகவேதுதிக்குங்குப்புசாமியைக்காத்த
காரணந்தசிவஞானசத்தி மூர்த்த - வெற்றி

மயில்கீர்த்தநம்.

ரு-இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

தாண்டவஞ்செய்தோகைமயிலே
தந்தோம்-தந்தோம்-தந்தோமெனத்

அநுபல்லவி.

சேண்டவழ்பொழிற்சூழ் போரூர்
ஆண்டவனை மீதிற்கொண்டு
திந்திமி-திமிதிமி ஜெகுதகுகுதகு
தந்திமி-திரிகிட தரிகிடதாவெனத்-தாண்டவஞ்

[சரணங்கள்]

அமரர்கள்குது கலிக்க
அடன்மிகுகரிமுகன்-அரிமுகன்முதலாம்
அசுரர்கள் மனஞ்சலிக்க-மிகமெலிந்து
சமயவாதிக ளொளிப்ப
சமரசமுனிவர்கள்ப்ரவியசியகுரு
சண்முகவேலர் களிக்க-அனந்தகோடி
சிமயமலைகுலுங்கச்-செகமெங்குநந்திலங்க
திந்திமி திமிதிமி ஜெகுத குகுதகு
தந்திமி திரிகிட தரிகிட தாவெனத்-தாண்டவஞ்

அட்டநாகமும் பதங்க
அலைகடல்கலநிறையுடபதியொடுகதிர்
அருக்கனோர்புடையொதுங்க-பூர்வத்திற்செய்த
துட்டவல்வினை விலங்க
சுருதியின்முடிவொளிர் சுகவநுபவநிதம்
தூயருளத்தி லிலங்க- வேள்விகள்செய்யும்
சிட்டரந்தணர்போற்றத் தேவர்பூமாரிதூற்றத்
திந்திமி திமிதிமி ஜெகுத குகுதகு
தந்திமி திரிகிட தரிகிட தாவெனத்-தாண்டவஞ்

வள்ளிதெய்வானைமகிழ்க்க
மகிழ்சமரபுரியி லுறைசரவணனொடு
வந்தெனதெண்ணம் கதிக்க-அடியர்நேசங்
கொள்ளுமெய்ஞ்ஞானமுதிக்க
குமரமுருகசிவ குருபரநமவென
குப்புசாமியுந் துதிக்க-வேதாகமத்தில்
தெள்ளுமுனிவர்பாடச் சித்தர்கணங்கொண்டாட
திந்திமி திமிதிமி ஜெகுத குகுத தகு
தந்திமி திரிகிட தரிகிடதாவெனத் - தாண்டவஞ்

---

கந்தசாமிகீர்த்தநம்.

சு-இராகம்-கேதாரம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

முருகா அருள்தருவாய்-குருவாயென்முன்வருவாய்

அநுபல்லவி.

திருவார்திருப்போரூர்வளர் ஜீவாதரதேவாஹரஹர-முருகா

[சரணங்கள்]

முறையோமுறை யெனுந்தேவர்கள் சிறைநீக்கிய இறையே
மறையோர்க்குருமகரயோதுஞ்சிவ வாயாஅன்பர்நேயா-ஹரஹர
முருகா

எமராஜன்வந் தணுகாமுன்னே எந்தாய்வந்தாள் கந்தா
குமராசிவ குமராஎங்கள் கோனேசெழுந் தேனே-ஹரஹர
முருகா
முத்தேமணி விளக்கேமுழு முதல்வாஉமை புதல்வா
சித்தேகுப்பு சாமிதொழும் தெளிவேஞான வொளிவே-ஹரஹர
முருகா

எ-இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

காங்கேயனே-எனைக் - காத்தருள்சகாயனே

அநுபல்லவி.

ஓங்குந்திருப்போரூர்வாழ் ஓம்சிவஷண்முகனே- காங்கேய

[சரணங்கள்]

ஊழ்வினையோட்டி உன்பதங்காட்டி
வாழ்தவநிலைநாட்டி மகிழும்அன்பரிற்கூட்டி-காங்கே

அசுரர்கள்காலா அயில்வடிவேலா
நிசரகசியமூலா நித்தருதவும்பாலா-காங்கே

சிவகுரு நாதா சிவஞானபோதா
நவவீரர்தொழும்பாதா நவில்சதுர்வேதகீதா-காங்கே

தரம்பெறும் பூமி தருஞ்சிவகாமி
வரம்பெறக்குப்புசாமி வாழ்த்துங்குமாரசாமி-காங்கே

அ-இராகம்-ஆரபி தாளம்-ஆதி.

பல்லவி.

வரந்தரவேண்டுமையா-முருகையாதல்
வரந்தரவேண்டுமையா

அநுபல்லவி.

சிரம்பணிந் தும்பர்கள் போற்றுந்திருப்போரூர்வாழ்
தெய்வயானைவள்ளி மணாளாகுணாளா-வரந்

[சரணங்கள்]

கபடவஞ்சனைசெய் யநீதர்-வந்துநிதங்
கலந்துகெடுக்குமட மாதர்
அபலமானஅவ ருறவுசெய்யாதிருக்க
அடியிணைமனதில்நான் மறவாமல்துதிக்க-வரந்தர

நாலாயிரத்துநா ஞற்று-எண்ணூறென
நவிலும்நோயணுகாமல் மாற்று
நாலாமறைமுடி மேலாவெனத்துதி
சிலா கதிர்வடி வேலாஇதுதரு-வரந்தர

சரவணப்பொய்கைநீ ராடி-உனதுதிருச்
சந்நிதிவலம்வந்து நாடி
ஹரஹரசிவசர வணமுருகாவென்றே
அநுதிநங்குப்புசாமி தோத்திரஞ்செய்யஇன்றே-வரந்

———o❁o———

௯-இராகம் உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி

என்மேல்வஞ்சமா-உமக்-கின்னங்கல்நெஞ்சமா-சாமி

அநுபல்லவி

மன்னுந்திருப்போரூர் தன்னில்வாழ்முத்துக்கு
மாரா பசுந்தோகை மயூரா-என்மேல்

[சரணங்கள்]

ஆசையினால்தேகம்- எடுத்- தலைந்த-தநேகம்
யோசித்தினியா கிலுஞ்செய்யுபகாரம்
பாசத்தில்விழா தெடுத்தாள்வதுன்பாரம்-என்மே

நாமொன்றினைநினைக்க-வினை-தாமொன்றினிலிழுக்க
எனிந்தத்துன்பம் வைத்தாய்கிருபைசெய்யா
யானந்தமாயென் றிருப்பேன்முருகையா-என்மே

தாரகமாமலையா-முந்நந்-கிரௌஞ்சாத்திலையா
சீருணகிரி நாதர்பிரபந்தா
நாரணனன்மரு காகுஹாகந்தா-என்மே

தந்தைதாய்நீயெனவே-ஞான-சற்குருநீயெனவே
சொந்தமாகவுனை நம்புங்குப்புசாமி
செந்தமிழ்க்கருள் முத்துக்குமாரசாமி-என்மே

௰- இராகம் தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆறுமுகனைத்துதிசெய்வாய் மனமே
அநுதினமே-எங்கள்.

அநுபல்லவி.

வீறுமெழில்திருப்போரூர்தனில்மேவும்
மெய்யன்புடையர்க ளுள்ளத்துலாவும் -ஆறு

[சரணங்கள்]

எண்ணித்தொழுபவ ருக்குநிதான
இன்பநிராமய வமுதமோன
நண்ணியமுப்பதத் தோங்குமெய்ஞ்ஞான
நல்கிடுங்கண்கண்ட தெய்வமான-ஆறு

உற்றார்பெற்றார்கள்மே லொன்றுஞ்சொல்லாதே
உண்மையைவிட்டைம் பொறியிற்செல்லாதே
கற்றோர்மாதவர் கலங்கச்செய்யாதே
காலன்பாசத்திற்கட் டுண்டுநீவாடாதே-ஆறு

பாலன்குப்புசாமி பணியும்பாதன்
பாவலர்கொண்டாடுஞ் சாமவேதன்
கோலமயிலின்மேல் வரும்விநோதன்
கோடிசூரியப் பிரகாசபிரபோதன்-ஆறு

௰௧-இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேலுமயிலுந் துணையென்றால்-பத்தி
மேலுமேலும்விளையுஞ் சத்தி

அநுபல்லவி.

மாதுமையனுந்தேடும் பாதன்
மனமகிழ்திருப்போரூர் நாதன்-வேலுமயிலுந்

[சரணங்கள்.]

அன்புடன்நக்கீர ரோதுந்திருமுரு
காற்றுப்படைக்கு ளிரங்கியுவந்தொரு
துன்புசெய்பூதத்தை வென்றுநலந்தரு
சோதியாய்த்தொண்டர்க ளெண்ணுமுன்னேவரு - வேலு

பழவினைதனை நாடாதோட்டும்
பத்திவலைதனில் சித்தத்தைக்கூட்டும்
குழகனடியை முடியிற்சூட்டும்
குருவாய்வந்தருள் நிலையைக்காட்டும் - வேலு

அன்பர்சொல்லுங் குலறலையப்போக்கும்
ஆநந்தவாழ்வை நமக்குண்டாக்கும்
இன்பமாகஎங் கெங்குந்தேக்கும்
எத்தித்தொழுங்குப்பு சாமியைக்காக்கும் - வேலு

௰௨-இராகம்-சகனா-தாளம்-ஆதி.

பல்லவி.

மயங்காதே மனமே மயங்காதே

அநுபல்லவி.

மயங்காதேதிருப்போரூர் வாழ்முருகனை நாடித்
தியங்குங்கவலைவிட்டுச்சீர்பெற்றானந்தங்கோடி - மயங்

[சரணங்கள்]

ஐந்துபுலன்கள்செல்லும் அக்கிரமவழியிலே
ஆவல்மிகக்கொண்டந்த மாயப்படுகுழியிலே

அடங்காதே பாவஞ்செய்யத்
தொடங்காதே மூலையில்
முடங்காதே முத்திபெற
மடங்காதே நிலைகெட்டுநீ-மயங்

போகஞ்சதமானதென்றெப் போதுமெய்யாகவேநம்பி
புல்லருறவால்நேரிடும் பொல்லாங்கைநினைத்துவெம்பிப்
போகாதே மாதர்மயல்
ஆகாதே வினையினால்
சாகாதே கட்டைதனில்
வேகாதே விறுதாவாய்-நீ-மயங்

குப்புசாமிபோற்றும்போரூர் குகனைப்பணிதூயனாக்
கொண்டாடிஅவர்க்கெப்போதுங்குற்றேவல்செய்வாய்நீயனாக்
கூடாதே அற்பர்தமைப்
பாடாதே நாய்போல
ஓடாதே குரங்குக்கூத்
தாடாதே எந்நாளும்-நீ-மயங்

---

௫௩-இராகம்-சாவேரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

அறிவாய்நின்றுநீ பாடு-நெஞ்சே
அருள்செய்வான்பேரின்ப வீடு

அநுபல்லவி.

குறியாவோர்குறியைக்கைக் கூட்டும்போரூரைநாடிக்
குழந்தைவேலன்பதத்தைக் கும்பிட்டுக்கொண்டாடி- அறி

[சரணங்கள்.]

மூவாசையென்னு மூடவிருளைநீக்கி
மூலத்தினின்றுசுழு முனைதிறந்துச்சித்தாக்கி
ஓவாமதியமுத மூண்ணூவினூற்பருகி
ஓசைவுமில்லாமல் ஒன்றாய்க்கலந்துருகி- அறி

வலையுட்பட்டமான்போல் மாயையினுழையாதே
வழிவிட்டுவழிபோனல் சுகமொன்றுந்தழையாதே
கொலைபாவங்களுக்கெல்லாந் தலைமையதைச்சேராதே
கொல்லாவிரதங்கொண்டால்குறையொன்றும்வாராதே-அ

எதொருநினைவுவந் தெழுமதைப்பார்த்து
எனதெனதென்னுஞ் செருக்கினைத்தீர்த்து

சாதனசதுஷ்டய சம்பத்தெல்லாம்பெற்றே
தமியன்குப்புசாமி சாற்றும்பாமாலைகற்றே- அறி

௰௪-இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

நீயேகதியெனநம்பினேன்- இந்தவேளையில்
நீயேகதியெனநம்பினேன்-

அநுபல்லவி.

நாயேனிடர் தீர்த்தருள்போரூர்
நாதாசிவ சமயப்பிரக்கியாதா-நீயே

[சரணங்கள்.]

புண்ணிய பாவங்கள்-அறியாது
போய்விழுமிந்தப்பாழ் ஜெனனங்கள்-அதை
நண்ணிடாமலுனை நினைந்துமனமுருக
நம்புமடிமைக்குமெய்ஞ் ஞானசுகம்பெருக-நீயே

கொடியவினையால் நொந்து-வருமுத்தண்டக்
கூற்றன்பயத்தாலுன் னிடம்வந்து-நிதம்
அடியன்சொல்லுமனக் குறைதனைக்கேட்டு
ஆதரித்தேநின் னடியரிற்கூட்டு - நீ

வள்ளியம்மை மணாளா-தெய்வயானை
மகிழவணைக்கும்பன்னிருதோளா என்றும்
உள்ளபடியே துதித்திடுங்குப்புசாமிக்
குவந்தனவரதமும் வரந்தருங்கந்தசாமி-நீயே

௰௫-இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

துரையே-துரையே- நின்வாய்திறந்
துரையே-இன்னம் வஞ்சமேனோ

அநுபல்லவி.

தரைதொழுஞ் சமராபுரிதன்னில்வாழ்
சரவணசுந்தரிபாலா பிரணவமந்திரமூலா- துரையே

[சரணங்கள்.]

நாயினுங்கீழ்ப்படுநாயின்மீதிலெந்
நாளுமுனக்கென்ன வாதா-பெற்ற
தாயினுந்தாயென்றுன்றனைநம்பிநான்
சரணடைந்தேன் தாதா
தேய்விலிளம்பிறை சூடியவேணி
ஈயும்வடிவயி லேந்தியபாணி
திரமிகுசூரனைவென்ற வரமுனிவோர்தொழநின்ற-துரை.

உனதுபன்னிருகண்ணிலோர்கண்ணருள்
உற்றிடில்வெவ்வினை யோடுமே-எனது
மனதிலுன்னருந் துன்பநோயின்றோடே
மாறியேநல்லருள் கூடுமே
சினந்தரும்பஞ்ச புலனைவாட்டிக்
கனம்பெறுமின்பக் கடலிலாட்டித்
திருவடியென்முடிசூட்டு மருவடியார்தமிற்கூட்டு- துரை.

நிலையையறியாவஞ்சகரோதேதோ
நினைத்துப்பேசிடுஞ்சொல்லைக் கேட்டு
மலையோமரமோசும்மாவிருந்திட
மானம்போய்த்தந்தென்ன எல்லைச்
சிலையானுலுமோர் காலமுருகும்
முலையானுலும்பா லுண்ணப்பெருகும்
செழுமதிகுப்புசாமி தொழுதிடுமுத்துசாமி-துரை.

௰௯-இராகம்-சாவேரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

அடித்துப்பாலூட்டுமென் - அன்னையைப்போல்நீயே
அருளமுதூட்டுவாயே வருவாயே

அநுபல்லவி.

நடித்திடுமயிலின்மேல் நண்ணுங்கமலபாதா
முடித்தவமுனிவர்கள் முறையிடும்வேதநாதா

படித்தமுத்தமிழ்வாணர் பரவுநித்தியவிநோதா
வடித்தவேலைக்கையில் பிடித்தபோரூர்நாதா - அடித்

[சரணங்கள்]

சிதம்பரசாமிக்குக்குமாரதேவராகச்
சென்றுதெரிசனந் தந்தாயே-உலகில்
செந்தமிழ்விளங்கவோர்கும்பமுனிக்குப
தேசந்தனையன்று புரிந்தாயே
இதப்பெறும்அருணகிரியார்பதினறு
யிரந்திருப்புகழ்க்கவிக் குவந்தாயே - பே
ரின்பமேவும்ஆற்றுப்படைசொலும்நக்கீரர்
இடரகலப்பொருப்பைப் பிளந்தாயே
அநஞ்செய்தசுரர்களை யமராக்காத்தே
அரியபொன்னுலகினில் அவர்களைச்சேர்த்தே
பதந்தருமையனே வல்வினைதீர்த்தே
பன்னிருகண்களால் என்முகம்பார்த்தே -அடி
குலுக்கிநடைநடந்தகூச்சமில்லாமல்பெருங்
குன்றைப்போல்காட்டியவர் தனத்தை - நிதம்
கொஞ்சிக்கொஞ்சிக்கெஞ்சிக்கொக்கோகநூல்படித்துக்
கொள்ளையிட்டிடுவார்கள் தனத்தை
பலுக்கிப்பல்லைக்காட்டிப்பரிகாசஞ்செய்துமுகம்
பார்க்கச்செய்வார்களுந் பணத்தை-மெல்லப்
பசப்பிக்கண்ணால்மருட்டிப்பாசவலையிலகப்
படுத்திக்கொண்டெனதுநன் மனத்தைக்
கலைக்குங்கள்ளியர்க ளென்றனைச்செய்யா
காத்தியங்களுக்கா ளாகாமல்பொய்யாய்
நிலைத்திடும்சகவாழ்வில் மயங்காதுமெய்யாய்
நினைந்துன்னைத்துதிசெய்யக் கதிர்வேன்முருகையா- அடி
அடிமைசெய்தபிழை யனைத்துமெடுத்துனாக்க
ஆதிசேஷனாலு மாகாது நெஞ்சில்
அதையெண்ணிநுமக்கெந் நாளுங்கிருபைஎள்
ளளவாயினும்உண்டாமோ எம்மீது

கடினமாகஇராமல்கர்த்தனேயந்தக்கொடுங்
காலன்தூதரொடும் வாராது-மிகக்
கடுகிநாயேன்முன்னந்தாய்மாரிருவருடன்
கலபமயின்மிசைவந் திப்போது
படிமிற்குப்புசாமி பத்தியாய்நிதம்பாடப்
பங்கயத்திருவடி பணிந்துனைக்கொண்டாடக்
கொடியவினைத்துயரம் குன்றிவாடியோடக்
குறைவிலாததொண்டர் கூட்டந்தனிற்கூட-அடி

---

௰எ-இராகம்-தனாசரி-தாளம்-ஆதி.

பல்லவி.

துணையெனக்காரையா-இந்தவேளையில்
துணையெனக்காரையா

அநுபல்லவி.

இணையடிகண்டநின் னடியார்களுருகிட
எத்துந்திருப்போரு ரையாவுனைவிடத்-துணை

[சரணங்கள்]

மூர்க்கருறவுசெய் வதிலென்னலாபம்
யார்க்குத்தெரியுந்தமி யேன்பரிதாபம்
போக்கிக்கடைக்கண்பாரா திருப்பதுமென்னபாபம்
காக்கவென்மீதிலுனக் கேனிந்தக்கோபம்-துணை

சும்மாஇருந்தாலுனைத் துதியார்களென்பதா
இம்மாநிலத்திலென்னை வினையாலிடர்செய்வதா
அம்மாவெனும்பிள்ளையை ஆதரிக்கலாகாதா
எம்மானேயெழிற்சிவ கிரியுறைநாதா-துணை

தஞ்சமென்றுனைத்தொழு திடுங்குப்புசாமிக்
கஞ்சலென்றேவரந் தருமுத்துசாமி
நஞ்சுண்டநாதர்க்குப தேசித்தகுருசாமி
வஞ்சமேனுனக்கென்மே லென்னகந்தசாமி-துணை

---

யஅ இராகம்-பியாகடை-தாளம்-சாப்பு

பல்லவி.

நின்திருத்தொண்டர்கள் வாழ்வடியேன்பெற
நீகிருபைசெய்யையா-முருகையா

அநுபல்லவி.

வன்பவப்பிணிதீர்க்கும் போரூராவென்றுகூப்பிட்டு
வாழ்த்துமென்றனிரு கண்ணுக்கெதிர்ப்பட்டு- நின்திரு

[சரணங்கள்]

பாசக்கடலினில் வீழவிடாதே
பாவத்தொழில்களைச் செய்யவிடாதே
மோசமங்கையரால் நையவிடாதே
மூடனுக்கி டாதே
ஈசனளிக்கும் குமாராபன்னிருகையா
இன்பநல்வீட்டை யெனக்கருளையா
தாசர்பணியுமார்த் தாண்டனிகர்மெய்யா
சாயுச்சியபதந்தருஞ் சரவணமுருகையா-நின்திரு

வினையினலித்தேகம் வாடவிடாதே
வெம்பிவெம்பிமன மெலியவிடாதே
மனையாள்மக்களென்முன் வருந்தவிடாதே
மாயையினி விடாதே
உனைவிடவேறுகதி யில்லையேகந்தசாமி
உற்றவுயிர்த்துணையா யிருக்குங்குமாரசாமி
எனையுன்மெய்த்தொண்ட ருடன்முத்துசாமி
என்றுந்தொழுதிருக்கச் செய்ஆறுமுகசாமி-நின்திரு

கற்றுமறிவில்லானாக் காணவிடாதே
கருமலவிருளினிற் கலங்கவிடாதே
சுற்றத்தார்களென்னுற் சோரவிடாதே
துயரத்தினி விடாதே
பற்றற்றமாதவர் பணிந்துதொழும்பாதா
பரமானந்தசுகத்தைத் தருமெய்ஞ்ஞானபோதா

குற்றம்பாராதென்றன் குறையையகற்றும்நீதா
குப்புசாமிபோற்றும் குமரசற்குருநாதா-நின்திரு

யசு-இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கதிர்வேலையனே எனைக்-காத்துரக்ஷிப்பாய்முருகையனே

அநுபல்லவி.

மதியணியுங்கைலாசநாதர்கு-மாரா-தீர-சூரசம்மாரா-கதிர்

[சரணங்கள்.]

அடிமைமேல்நிதம்-இன்னம்-ஐயாவுனக்கேனிந்தசபதம்
நடிக்குமயிலின்மீதிலேறு - நாதாதுயர் தீர்க்கவாதா - கதிர்வே

அமரர்மூலனே-தெய்வ-யானைவள்ளிநாயகிலோலனே
மமதைகொண்டமூவாசையால்-வாடாமலே- மையல்-மூடாமலே
கதிர்வேல

கிரனைக்காத்தாயே-உன்-கீர்த்தனைசெய்குப்புசாமிக்கருள்வாயே
சீரலைவாய்வாழ்சாமிநாதா- சேயா அடியவர்-சகாயா- கதிர்வேலைய

உய-இராகம்-உசேனி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏனோஇந்தவாது-ஏழைமீதிலிப்போது

அநுபல்லவி

வானோர்கள்துதித்து வணங்கும்போரூனாயா
தானாகவேயெனைத் தடுத்தாட்கொள்முருகையா - ஏனோ

[சரணங்கள்]

பெற்றபிள்ளையின்மேலே பெருவஞ்சம்வைத்ததாலே
உற்றதுணை யாரப்பாலே ஒன்றுமறியார்கள்போலே-ஏனோ

தந்தைதாய்நீயன்றென் பாரோ சரண்புகுமெனைப்பாராரோ
உன்தனக்காருஞ்சொல் லாரோ உனைவிடஎனக்காரோ- ஏனோ

பொல்லாவினையைப்போக்கப்பொன்னடியென்னுள்ளந்தேக்க
எல்லாமுன்மயமாக்க எனையடியாரிற்சேர்க்க- ஏனோ

நாயேன்கவலை யோட்ட நாதாந்தபோதங்காட்டத்
தாயாய்வந்து பாராட்டத் தயவுவைத்தமுதூட்ட எனை

குப்புசாமி தொழும்பாதா குமரசற்குருநாதா
செப்புமெய்ஞ்ஞானபோதா சிருறஅருள்செய்தாதா-எனை

உக-இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

தெய்வமென்றுன்றனை நம்பிச்சொல்லச்சொல்லத்
திருப்பிக்கடைக்கண்பாரா திருப்பதுதர்மமல்ல-தெய்வ

அநுபல்லவி.

வையகந்துதித்து வணங்கும்போரூர்நாதா
வலக்காரஞ்செய்யவுனக் கிலக்காளன்மேல்வாதா-தெய்வ

[சரணங்கள்]

பூனைவாயினிலெலிஅகப்பட்டுக்கொண்டதுபோல்
பொல்லாக்கவலையாலே மனம்வாடி-நெடும்
போராட்டமாதலுதும்பகதும்பித்தர்கள்போலப்
புத்திபிரமைகொண்டலைந் துழன்றோடிக்
கானலைநின்றுகருதுமானெனவே
கல்லாதவரைக்கற்றோ னெனநாடி-மனம்
கலங்குமெனக்குனதருணைப்பேரின்பவழி
காட்டுமென்றுன்புகழைப் பாடிக்கொண்டாடித்-தெய்வ

கொடியபாவிநானென்றன் குறைகேளாவிடி லுன்மேற்
குற்றஞ்சாராமற் போமோவடிவேலா-நிதம்
கூக்குரலிட்டழுதாலுந் தேறுதலைசொல்லிக்
கொண்டணைப்பவரில்லை யுமைபாலா
கடினமாகஇராம லுமிரங்கிவந்தென்
கலக்கந்தீர்த்துச் சதுமறைமூலா-கொடுங்
காலனுக்கடிமையைக் காட்டிக்கொடுத்திடாமல்
காத்திடவேணும் சசிலா-வள்ளிலோலா-தெய்வ

குருவாகவந்தென்முன் குறியாநிலையைத்தயை
கூர்ந்துபதேசித்திக்கண் பாளையா-தொழுங்
குப்புசாமியாமிந்த வடிமையையாதரிப்பார்
குலதெய்வமுனையன்றி யாளையா
மருவுந்தெய்வயானையும் வள்ளிநாயகியையும்
மார்போடணைக்கும் பன்னிருகையா-இந்த
மாயப்பிறப்பொழித்து மாறுப்பேரின்பவீட்டில்
வைத்தருள்செய்வையா புரிமுருகையா-தெய்வ

உஉ-இராகம்-கேதாரகௌளம்-தாளம்-ஆதி.

பல்லவி.

குலதெய்வமாயிருக்கும்போது-நமக்குக்
குறையுண்டோமனமேநீயோது

அநுபல்லவி.

புலவர்தொழுந்திருப்போ ரூரில்வாழும்புண்ணியன்
போற்றுமன்பர்க்கருள் புரியுஞ்சுப்பிரமண்ணியன்- குல

[சரணங்கள்]

காமவிகாரமோகக் களைகொண்டுவாடாதே
காலத்தைவீணாகக் கழித்திடநாடாதே
நேமநிஷ்டைகளில்லா நீசரைக்கூடாதே
நெஞ்சிரக்கமில்லா நிர்மூடரைப்பாடாதே-குல

போனஆசையினால் பேய்போலத்திரியாதே
பெற்றதாய்தந்தையர்க்குப் பிழையொன்றும்புரியாதே
ஆராசொன்னாலும் அகங்கரியாதே
ஐயன்சடாக்ஷரமந்திரம் அல்லாலொன்றுச்சரியாதே- குல

திருமுருகாற்றுப்படை செப்புந்தமிழ்நக்கீரன்
சிறையையகற்றுந்தேவன் தீரமிகுந்தசூரன்
இருகூறுகத்துணிக்கும் எழிற்கதிர்வேல்வீரன்
எந்நாளுங்குப்புசாமி எத்துந்திருப்போரூரன்- குல

உரு-இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

வீணாயேனலைகிறாய்மனமே-எந்நாளும்
வீணாயேனலைகிறாய்மனமே.

அநுபல்லவி.

சேணுடர்போற்றுந்திருப் போரூர்மாநகர்வாழும்
தெய்வகுஞ்சரி நாயகனைக்கண்டுருகாமல் - வீணா

[சரணங்கள்]

சமரசஞானவொளி தாண்டி-சிவ
சண்முகன்பாதத்தை வேண்டி
நமதெனவேவரு மபிமானமகலச்
சமயப்பிரக்கியாதகுரு சாமியைக்கண்டுருகாமல்-வீணாய்

மாதர்களாசையையொழித்து-துஷ்ட
மனிதருறவதனைக் கழித்து
காதகக்கொடியநமன்வரும்வேளைமுன்னே
கதிதந்தருளுங்கதிர் வேலனைக்கண்டுருகாமல் - வீணாய்

ஆசைபெறுந்தளையைத்தறித்திட்டுக்-கொடிய
அக்கிரமமானசித்தம் வழிபட்டுப்
பூசனைசெய்துதொழுங் குப்புசாமியைக்காக்கும்
புண்ணியகுமாரசுப்பிரமண்ணியனைக்கண்டுருகாமல்-வீணாய்

உச-இராகம்-சாரங்கா-தாளம்-ஆதி.

பல்லவி.

வணங்குவாய்மனமே-ஜென்மமீடேற
வணங்குவாய்தினமே

அநுபல்லவி.

கணங்கள்சூழுந்திருப் போரூர்மாநகர்வாழும்
சகலதேவர்களைக் காத்தருளையனை
டகவாழுமதி ஜாக்ஷரமெய்யனை - வணங்கு

[சரணங்கள்]

உடல்பொருளாவிமூன்றும் ஒருமையாய்த்தத்தஞ்செய்து
உண்மைக்குருமொழியை யுன்னித்தீமையைக்கொய்து
திடம்பெறுஞானநிலை சேர்ந்துய்வதுவேநன்று
சித்தமொருவழியா யொத்திடநீநின்று
சத்திவடிவயில்சேர் அத்தன்பதியிற்சென்று - வணங்

வேதமுடிவையார்க்கும் விளக்கவருமுதல்வன்
விண்ணவர்பணியுமுக் கண்ணர்தரும்புதல்வன்
பாதப்பேரொளிகண்டு பரிந்துவந்துகூடிப்
பாசமாம்வினையை வாட்டிமதியைநாடித்
தேசுலாவுமின்ப மோக்ஷகதியைத்தேடி - வணங்

இன்னமுஞ்ஜாலஞ்செய்ய எண்ணங்கொண்டோடாதே
இறைவனைப்பூசியாத இழுக்கனைக்கூடாதே
சின்னஞ்சிறியல்குப்பு சாமிசகாயனைச்
சிந்தித்தேயோர்நொடி யெனுஞ்சிவாயனை
வந்தித்தேநீமற வாதெங்கள்தூயனை -வணங்

உரு இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-சாப்பு

பல்லவி.

ஐந்துபுலன்களொருமித்து-நெஞ்சே
ஆநந்தமுருகனை நத்து

அநுபல்லவி.

சந்ததமுஞ்சம ராபுரியிலிருந்து
சரவணபவவெனச் சரண்புகுவாய்தெரிந்து - ஐந்து

[சரணங்கள்.]

ஆசாபாசத்தைநீக்கிச் செல்லு-சென்று
அருளைமுன்னிட்டுநீ நில்லு
ஈசாவென்றநுதினம் எண்ணியன்புததும்பி
இறைவனடிக்கமலம் இறைஞ்சித்தொழுதநம்பி -ஐந்து

நினைப்புமறப்பென்பதை விட்டு-அந்த
நிஷ்க்களரூபினைக் கிட்டு
அனைத்துமேபொய்யென்றும் ஆதியேமெய்யென்று
ஆசானுரைத்தபடி அறிவாகியேநின்று- ஐந்து

பாதகமேயொரு தேகம்-இதைப்
பார்க்குந்தோறும்வரு மோகம்
காதகநமன்வந்து கடும்பாசந்தனைவீசிக்
கட்டியிழுக்குமுன்னே கனிந்தவன்புகழ்பேசி - ஐந்து

தத்துவச்சேட்டைக ளற்று-ஞான
சம்பத்தெல்லாஞ் சித்திபெற்று
முத்திதனையளிக்கும் முதல்வனைக்கொண்டாடி
மூன்றுமலமொழித்து மோனபதத்தைநாடி - ஐந்து

சிறியேன்குப்புசாமி யீடேற-மனந்
தெளியக்குருவாய்வந்து கூற
குறிப்பாயருளியஅப் பொருளின்குறிப்பையெண்ணிக்
கூடும்அடியார்திருக் கூட்டந்தன்னைநண்ணி-ஐந்து

உகூ இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இதுசமயமையா-தயவுசெய்வாய்

அநுபல்லவி.

பதுமமலர்த்தாளனே பரவும்போரூராளனே-இதுசமய

[சரணங்கள்]

அரகராவென்றுசொல்லேன் அருளுக்குப்பாத்திரனல்லேன்
பரவுமெய்ப்பத்தியில்லேன் பத்திவழியிற்செல்லேன்

இதுசமய.

எனதுதயவாரெப்போது மெடுத்துரைத்துமென்னவாது
உனதுகிருபைக்குத்தகாது உபதேசிக்கவிட்போது

இதுசமய.

அளவில்மாயாவிகாரம் அதைநீக்கும்பரிஷ்க்காரம்
வளரச்செய்சிவாசாரம் மகத்தானஉபகாரம்

இதுசமய.

காலனையணுகாதோட்டக் காத்துநாயேனைப்பாராட்டச்
சீலவறிவினிற்கூட்டத் திருவடிசிரமேற்சூட்ட

இதுசமய.

சுப்பிரமண்ணியதேவே சுந்தரிமகிழும்பூவே
குப்புசாமிதன்னைக்காவே குறுமுனிக்கருள்கோவே

இதுசமய.

---

உஎ-இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆனந்தமானநின் னடியைப்பூசித்துத்தேற
அநுக்கிரகஞ்செய்யீடேற.

அநுபல்லவி.

ஆநந்தமானநிலை தனையறிந்தவர்துதி
ஞாநந்திகழ்போரூர்க்குரு நாதாஇதுதருதி- ஆநந்த

[சரணங்கள்]

விரகவேதனைவிளை விக்கும்புலனென்றுபட்டு
நரகவேதனைக்காளாக்கும் நாரியர்சுகத்தைவிட்டு
சரவணத்தெய்வவாவி தனில்மூழ்கிவெண்ணீறிட்டு
ஹரகாமுருகாவென்றே யநுதினமுங்கும்பிட்டு-ஆநந்த

புல்லுமஞ் ஞானவழி போகாமலுனைநாடி
அல்லும்பகலுந்துதிமெய் யடியார்களுடன்கூடிச்
சொல்லுமுனதரிய தோத்திரப்பாமாலைபாடி
மல்லிகைமுல்லைமலர் மருவுசெண்பகஞ்சூடி-ஆநந்த

மும்மலவினைத்துயர் முழுதும்வேருடன்போக்கிச்
செம்மையுறுமெய்ஞ் ஞானத் திருக்கண்பார்வையால்நோக்கி
இம்மையிற்குப்புசாமி யெனுநாயேனைக்கைதூக்கி
செம்மையாயுன்னைத்துதி செய்யுந்தொண்டனாக்கி-ஆநந்த

உஅ - இராகம் - பந்துவராளி - தாளம் - சாப்பு.

பல்லவி.

முருகன்பாதந் துணை முருகன்பாதந் துணை
முருகன்பாதந் துணை முருகன்பாதந் துணை

அநுபல்லவி.

பிரணவப்பொருள்தன்னை அரன்தனக்குரைசெய்த
பிரபோதன் சுரர்நாதன் சதுர்வேதன் எங்கள்-முரு

[சரணங்கள்]

துய்யமுநிவர்கள்சூழ் சமரமாபுரிலோலன்
ஆதிமூலன் அதிசீலன் கதிர்வேலன் எங்கள்-முரு

முந்தேவல்வினையோட்டி எனைக்காட்டியமுதூட்டும்
முதிராசன் பசுபாசன் விசுவாசன் எங்கள்-முரு

சிதம்பரசாமிக்கருள் செய்யுங்குருநாதன்
ஜெகன்மோகன் ரவிதேகன் புகழ்தியாகன் எங்கள்-முரு

குப்புசாமிதமிழ்க் குதவுஜீவகாருண்யன்
குணவாளன் அணிதோளன் இனியாளன் எங்கள்-முரு

---

உ.கூ-இராகம்-மாஞ்சி-தாளம்-சாப்பு.

பல்லவி

இன்னமென்மீதில் வெறுப்பேதோ-பே
ரின்பவீட்டையெனக் கருள்செய்யலாகாதோ

அநுபல்லவி.

மன்னர்போற்றுந்திருப் போரூர்வாழ்பன்னிரு
வாகா யோகா திவ்வியாநுபோகா- இன்ன

[சரணங்கள்]

அமைவிதிப்படி பூசனைபுரிய
அறுமோவென்றுள்நி யதியச்செய்தெரிய
வேகமயூர வாகனமேறிய
வேதா நீதா ஷண்முக நாதா-இன்ன

ஓலமிட்டுன்னைநான் தேடிவரும்போது
ஒன்றுமறியார்போல் இருந்தால்நீதிப்போது

பாலனைக்காப்பவ ரார்வடிவாம்பிகை
பாலா சீலா கதிர்வடிவேலா- இன்ன
உப்பிருந்தபாண்டம் உடைப்பதுபோலே
உடல்முழுதும்வாட்டும் கொடியவினையினாலே
குப்புசாமிவருந்தும் துயர்தனைத்தீர்த்தருள்
கோவே காவே அமரர்கள்தேவே- இன்ன

---

## ருய-இராகம்-அடாணா-தாளம்-ரூபகம்.

### பல்லவி.

முழுதும்வர்மமா நான் முன்செய்தகர்மமா

### அநுபல்லவி.

தொழும்அடியார்க் கருள்செய்யும்போரூரா - முழு

[சரணங்கள்]

எலும்பைப்பெண்ணாக்கு மெய்ப்பெருமானே
ஏடெதிரேறச் செய்தஎங்கோனே
கலங்காநிலையை அளிக்குந்தேனே
கஞ்சனைக்குட்டிச் சிறைதவிர்த்தோனே-முழு

அல்லலெல்லாந்தவிர்த் தாளுவார்நல்லோர்
ஆளாவிடில்ஆண்டான் அடிமைஎனுஞ்சொல்லோ
சொல்லச்சொல்லவுமக் கென்னவென்மேல்மல்லோ
சுப்பிரமண்யனேஉன் மனங்கருங்கல்லோ-முழு

முருகாவென்றமாதின் முன்தோன்றுமூலனே
முழுதநம்பும் அடியார்க்கநுகூலனே
குருவேயென்தாய்வள்ளிக் குசுந்தமேலாலனே
குப்புசாமிபோற்றுங் குழந்தைவேலனே-முழு

---

## ருக-இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

### பல்லவி.

எந்நேரமும்இந்தப் போராட்டமானால்-நான்
எப்படிசகிப்பேன்நீ சொல்லையா-முருகையா

அநுபல்லவி.

தன்னைறியாதிருத் சமராபுரியாளனே
சராசரத்துட்புறம்பாய்த் தழைக்குந்தயாளனே- எந்நே

[சரணங்கள்.]

சஞ்சலத்திப்பற்றித் தணலாய்த்தகிக்குதே
தத்துவந்தொண்ணூற்ருறுந் தனிச்சென்றுநிகைக்குதே
வஞ்சகவேடனைவர் வலையில்விடுக்குதே
வரும்பெரியோரைக்காண மனமிகநடுக்குதே- எந்நே

பெண்ணாசையென்னுமொரு பேய்பிடித்தாட்டுதே
பிணிக்கூட்டமாஞ்சத்துரு பிரியாமல்வாட்டுதே
மண்ணாசையெனும்பாவி வாவென்னக்கைகாட்டுதே
மனமாயைவந்துவந்து மயக்கத்தைமூட்டுதே-எந்நே

குருவாகச்சிதம்பர சாமிமுன்வந்தோனே
குப்புசாமிதமிழைக் கொண்டுள்ளமுவந்தோனே
கருமலநீக்கியன்பர் கருத்துளிருந்தோனே
காதலில்வந்தெவர்க்குங் கதிநிலைதந்தோனே-எந்நே

௩௨-இராகம்-அசாவேரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

இந்தத்துக்கத்தைத்தீர்த்துக்காப்பாய்-காத்து
இனியுன்னருட்கண் பார்ப்பாய்

அநுபல்லவி.

நந்தவனஞ்சூழும்போரூர் நாதாந்தனேஇன்னம்
நான்மறைக்கெட்டாச்சிவ ஞானாநந்தனேமுன்னம் இந்த

[சரணங்கள்]

பொருளிச்சல்விபத்தால் பொல்லாக்கவலைநிதம்
போராடிநெஞ்சில் பொருந்துமோநிப்பதம்
குருவாய்வந்திந்தவேளை கொடியேனுளந்தெரிந்து
குறிப்பாராட்டாமல் குலதெய்வமாயிருந்து-இந்த

பெண்ணாசையொருபக்கம் பொன்னாசையொருபக்கம்
மண்ணாசையொருபக்கம் மகவாசையொருபக்கம்
உண்ணாடியேமனம் உழன்றதுபோதும்போதும்
புண்ணியனேநின்பதம் போற்றவறியேனேதும்-இந்த

உனைவிடவேறொருவர் உண்டோஎனக்காதாரம்
உண்மைதெரிந்தெனைநீ ரக்ஷிப்பதுன்பாரம்
அனையுமைபாலுண்டுமூ வாண்டிற்பாடும்பாலா
அடியேன்றுப்புசாமி அன்பாய்ப்பணியும்வேலா-இந்த

௩௩-இராகம்-எமுனா-தாளம்-ஆதி.

பல்லவி.

தேவாதிதேவா-வாவாமகாநுபாவா-தேவாதிதேவா

அநுபல்லவி.

காவார்ந்திடும்போரூர்வாழ்-கந்தாசங்கரன்மைந்தா-தேவாதி

[சரணங்கள்]

அகஸ்த்தியமுனிவருக்கன் றகத்திருளகற்றிமந்திர
மகத்துவஞானநிலைய வகுத்தசற்குருபரா-தேவாதி

நரைத்தகிழவனைப்போல் இரைத்துவண்டார்புனத்தில்
விரைக்குழல்வள்ளியுள்ளங்கரைத்துமணம்புணர்ந்த-தேவாதி

சூரர்குலக்கனையெல்லாம் வேரறத்தடிந்தேயைந்து
தாருநிழலமரரும் சீருறக்கிருபைபுரிந்த-தேவாதி

மரகதநீலமயூர குரகதமீதில்வந்தந்த
விரதமடமாதினுக்கோர் கரதலமகிழ்ந்துதந்த தேவாதி

தெய்வயானைமணவாளா திகழும்தாமரைத்தாளா
சையநிகர்தோளாருப்பு சாமிக்கருள்தயாளா-தேவாதி

௩௪-இராகம்-துசாவந்தி-தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னமுந்தாமசஞ் செய்வதுனக்குச்சரியோ
இனித்துணையுன்னையல்லால் ஆரோ-முருகா

அநுபல்லவி.

உன்னக்குயில்கள்கூவும் உன்னதப்போரூர்மேவும்
மன்னவா என தாழ்வினைபோக்கவும்
பொன்னவாவொழித் தானந்தமாக்கவும்-இன்

[சரணங்கள்.]

அரிமுதற்றேவர்கள் அனைவருங்கூடிக்கயி
லாயம்வந்துன்னடியை வேண்டி-வல்
அசுராள்வாடுந்துயர் அனைத்துமெடுத்துரைக்க
அவர்க்கருள்செய்பழனி யாண்டி
கிருஞ்சகற்கிளையோனே எரியில்எடெடுத்தோனே
திரிவிதமல காமாதியுபாதியும்
விரிவுடனறுதிறம் எடுத்தெடுத்தோதியும்-இன்ன

உன்தந்தையோவென்றால் ஓதுஞ்சுந்தரன்றமிழ்க்
குவந்தேதவலியவந்தாட் கொண்டு-பின்னும்
ஒன்றும் அவிநாசியில் முதலைவாய்ப்பிள்ளையை
உதவக்கிருபைசெய்த துண்டு
இன்னும்அநேகமான நன்மைசெய்வல்லோனை
பொன்மயவேணிய னளிக்குங்கெம்பீரனே
தொன்மறைமுடிவுறும் பிரணவஓங்காரனே-இன்ன

வயல்தனில்இரைதேட வோடிவரும்பக்ஷியை
வழியிலொருவன்வலை போட்டுப்-பற்றும்
வகைபோலநமன்வீசும் பாசத்தாலலையாதென்
மனமொருமிக்கநிலை நாட்டு
அயில்வேற்பன்னிருகையா மயிலேறுமுருகையா
ஜெயஜெயவென்றநாளும் போற்றுங்குப்புசாமி
தயாபரமகத்தியானும் போரூர்க்கந்தசாமி- இன்ன

௬௫-இராகம்-ஆநந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னமுங் கோபமாமோ-தோள்கடன்பிழையை
கண்ணிலைக விடலாமோ

அநுபல்லவி.

கன்னலிற்செந்நெல்சூழும் -நன்னயப்போரூர்வாழும்
சொர்ன்னமாமயி லேறும்விநோதனே
என்னைக்காத்தருள் சிவகுருநாதனே-இன்ன

[சரணங்கள்]

ஆறுமாமுக தேவா-இந்தவேளைவந்
தாட்கொள்மகாநுபாவா
மீறுமையலைத்தடுத்து தேறுமதியைக்கொடுத்து
கூறுவாய்வடி வாம்பிகைபாலனே
வேறுதுணையிலை கூர்வடிவேலனே-இன்னமும்

நற்றவர்தொழுங் கெம்பீரா கிருபைகொண்டந்த
நக்கீரனைக்காத்த வீரா
பெற்றவன்நீயேயல்லால் சுற்றம்வேறுண்டோசொல்லாய்!
கற்றைவார்சடை யோன்தருஞ்சேயனே
சற்றுந்தயவிலை யோகாங்கேயனே-இன்னமும்

குன்றுதோறுடும் நீதா-எந்தநாளும்
குப்புசாமிதொழும் பாதா
ஒன்றுமறியாதபேயேன் நின்றுதுதியாதசேயேன்
என்றுவந்துனைக்காண்பே னையனே
அன்றுசூரனைவென்ற முருகையனே-இன்னமும்

௩௬-இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

நான்சொல்லும்புத்தியைக் கேளு- மனமே
நாதாந்தவழியிலெந்நாளுமேமீளு

அநுபல்லவி.

நானென்னுமகந்தையை விட்டு-நீ
நன்னெறிசென்றுனை தன்னியத்தைக்கிட்டு
மானின்றபெண்மனை வாளன்-பதம்
வணங்கிடில்சுகந்தருஞ் ஜீவதயாளன்- நான்சொ

[சரணங்கள்.]

உலகப்பழிக்குமென் றெண்ணி-ஞான
உண்மைதனைவிட் டேழலாதேநண்ணி
விலகிடஅஞ்சி நில்லாதே-நமது
விதிவழியெவ்விதமோவொன்றுஞ்சொல்லாதே - நான்

அறிவாளனென்றுபேர் வந்தே-இன்னம்
ஆணவத்தாலே யகங்கொண்டுநொந்தே
வெறிகொண்டுதிரிந்து வையாதே-அதனால்
வீணுச்சென்மம்வந்துமேவும்பொய்யாதே- நான்சொ

பொருள்நிலையென்று வெம்பாதே-கெட்ட
போராட்டமாமிந்தப் போகம்நம்பாதே
குருவருள்பெற்ற படியே-அடியர்
கூட்டத்தைச்சேர்ந்தவர் கூறுநூல்படியே - நான்சொ

வஞ்சகமேசெய்யும் வேடர்-ஐவர்
வலையினிற்சிக்கி வருந்தியமூடர்
அஞ்சார்கள் பாவமேசெய்ய-அவர்
ஆசையைவைக்காதே அறிவாய்நீயுய்ய - நான்சொ

வேளைக்கோர்நினைவாகக் காணும்-கேட்டால்
வினையென்றுவிதியென்றுவிவரிக்கத்தோணும்
நாளைக்கேநமன் வருவானே-அதை
நாடியேபார்த்து நலஞ்செய்நீதானே - நான்சொ

பொன்னிருந்தாலே உறவு-இது
போய்விட்டாலிவ் வுலகத்திற்குறைவு
தன்னையேயோசித்துப் பார்த்து-அது
தானுவாய்சொன்னேன் தடுமாற்றம்தீர்த்து - நான்சொ

கெட்டதைநீக்கென்று சொன்னால்-அதைக்
கேளாமலெப்போதுங் கேடுதியேயுன்னால்
மட்டில்லாநோய்வந்து வாட்டும்-குருவை
மறவாதேசொன்னேனுன் னிலைதனைக்காட்டும் - நான்

அடுத்தவரைக்காக்குந் தெய்வம்- போரூர்
ஆறுமுகனையடுத்துநாம் உய்வம்
தொடுத்தபாமாலையைச் சாத்தி-அவன்
சொந்தம்பெற்றிருக்கலாஞ் சுகமாகவாழ்த்து- நான்சொ

குப்புசாமிதொழும் பாதன்-தமிழ்க்
குறுமுனிக்குபதேசஞ் செய்குருநாதன்
செப்பியவாக்கின் பிரகாரம்-நின்று
சித்தைவைத்தாலிது நமக்குபகாரம்- நான்சொ

௯௮-இராகம்-பிலகரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

நில்லாய் ஒருவழியே-நெஞ்சேநீ
நில்லாய் ஒருவழியே

அநுபல்லவி.

நல்லார்தொழும்போரூர் நாயகனைவந்தித்து
நானென்னும்போதமற்று நாதன்சொல்லைச்சிந்தித்து-நில்

[சரணங்கள்]

ஒன்றைநினைக்கும்போது ஒன்றைநீநாடாதே
உள்ளபடிமுடியும் ஒன்றுக்கும்வாடாதே
அன்றையதினம்ஆசான் அநுக்கிரகம்செய்தபடி
ஆறுமுகனையேத்தி அசைவின்றிஒருநொடி - நில்

பெண்ணையுமண்ணையும் பொருளையுமெய்யென்று
பேசாதேயதுகெட்ட போராட்டமென்றகன்று
கண்ணைமூடியொரு கணமேனுநிலைநின்மூல்
களித்துப்பரவெளியிற் கலந்துவாழ்வாய்நன்றாய்-நில்லா

விதியென்றும்வினையென்றும் விவரித்துச்சொல்லாதே
வீணாய்ப்படுகுழியில் வீழ்ந்தழிந்துநில்லாதே
கதிதருமையனைக் கருத்திற்கொண்டாலெப்போதும்
கருமலம்விட்டகண்டா காரமாவாயிப்போது-நில்லா

என்கெட்டுப்போருயென்றால்இன்னங்கெட்டுப்போறேன்மு
என்னபத்தயமென்று கேட்பவன்போல்நீயென்னை [ன்னை
வான்புவியெங்குமோடி மயக்கத்தைமூட்டாதே
மகிழ்வுதொண்டிங்கேயுன்மகிமையைக்காட்டாதே-நில்லா

புண்ணியவசத்திருத் பிறந்தகோர்நினைப்பீரு
போகாதிருக்கவருள் புரிகுப்புசாமிமீரு
எண்ணியவஞ்சக எண்ணமெல்லாம்விட்டு
இறைவன்சுப்பிரமண்யன் இணையடிகும்பிட்டு- நில்லா

௯௧-இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னென்னசொல்லியும்நீ யொன்றும்பேசாதிருந்தால்
என்செய்வேனினியையா

அநுபல்லவி.

அன்னமுலாவுப்போரூர் ஆறுமாமுகந்தோனே
ஆவலாய்ச்சிதம்பர சாமிமுன்வந்தோனே
அரியயனுநியர் துதிசெயும்பாதனே
கரிமுகனுபகர்த் கிளையவிநோதனே-என்

[சரணங்கள்]

பெற்றவர்பிள்ளையைக் கைவிடுவார்களோ
பிழைபொறுக்காதிதென்ன கோரம்-பெரும்
பேய்காட்டேரிகிராமப் பிடாரியைநம்பினும்
பெருமையாய்ச்செய்யுமுப காரம்
குற்றமில்லயுன்மீதில் எனதபூர்வதவக்
குறையால்வருமனவி சாரம்-அவை
கொண்டகவலைதீர்க்க உனைவிடவேறொரு
குலதெய்வமுண்டோது தாரம்
கோலமயிலின்மீதி லேறும்வடிவேலனே
சேவடியார்தொழும் தியாகசாருங்பாலனே-என்னெ

தெய்வமென்றுன்றனை நம்பியுமின்னமென்னைத்
  தெரிந்துஞ்சோதிக்க தர்மமோ-தேவ
தேவர்க்கரசேயிந்த வேளைவந்துதவா
  திருப்பதெனது கர்மமோ
ஐயங்கொண்டெப்பொழுதுஞ் சும்மாயிருப்பதுன்றன்
  அருளுக்கழகோ வர்மமோ-நீ
ஆண்டுமென்குறைபோகா திருப்பதேனேழுரு
  கையாநான்செய் யதர்மமோ
அடிமைமீதிதுனக் கேனிந்தவாறு
கொடியனேன்துயரை நீக்குமிப்போது - என்ன

எனதுஎண்ணத்தின்படி செய்குவீரானாலும்மை
  எளனஞ்செய்வாருன்னடி யார்கள்-அதை
என்னென்றுகேட்பீரானா லென்னைப்போற்கொடும்பாவ
  மெவர்களுஞ்செய்யத்துணி யார்கள்
சினமதைவிடுத்துன்றன் திருவடிசிரஞ்சூடும்
  சிவயோகமொனநிலை யார்கள்-அதி
தீவரபக்குவருமென் றேடுசேர்வாரானால்
  சிறிதேனும்பதமனு கார்கள்
தீயவசுரனை வென்றதிண்டோளனே
  சேயன்குப்புசாமி போற்றுந்தயாளனே-என்ன

சஅ-இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேலாயுதா வேறுதுணையா ருனையல்லாலெனக்கு-வேலாயுதா

அநுபல்லவி.

சீலர்சூழுந்திருப் போரூர்தனில்வாழுஞ்
  சித்தனே முத்தனே பரிசுத்தனே-வேலா

[சரணங்கள்]

மாதவராப்பணி யாதமுடன்
மாசுடைய பாவமேசெய்வேடன்

பாதகங்களகற் றும்வடிவாம்பிகை
பாலனே மூலனே வள்ளிலோலனே-வேலா

எளிந்தவர்மம் எனைமீது
எத்தும்அடிமையென்று நீயிரங்காது
ஆனந்தநடனத் தியாகராஜர்தந்த
ஐயனே மெய்யனே முருகையனே-வேலா

பாதந்தனைநம்புங் குப்புசாமி
பாசவினைதிர தயைபுரிசாமி
நாதவேதபோத நாயகசகஸ்த்திர
நாமனே தாமனே கதிர்காமனே-வேலா

---

சக -இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சற்றுநேரமாகிலுமென் சித்தம்நிலைகொள்ளாது
தத்தியோடிதென்செய்குவேன் முத்துக்குமாரவேலனே

அநுபல்லவி.

முற்றும்பரிசுத்தநிலை பெற்றுவாழ்நற்றவர்க
ளொத்துவிளங்கும்போரூர்வாழ் கர்த்தனேயுன்திருவடி
பற்றுநன்னெறிவழியி லுற்றுமிகவித்தனாயில்
நத்தும்வகைதெரியாமல் கத்தியோடுமேயல்லாமல்-சற்று

[சரணங்கள்]

ஐந்துபுலனொருமையாய் மூன்றுநிலைகூடிடாமல்
வெந்துதடுமாறிநிதம் வெந்துமயலால்
நொந்துபோகும்வகையோடி கெடாமலது
சந்ததமுமுனைத்தேடிக் கதிபெறவே
வந்துதிக்கும்பொற்பதமலர் சொந்தம்பெறவொருநொடி
பந்தம்விட்டுநில்லாதெழுந் தந்தனேயென்சொல்லின்படி-சற்று

பொய்யானவாழ்வினை மெய்யாய்நம்பியுலகிற்
செய்யாதகொடுமைகள் செய்யத்துணிந்து

நொய்யாப்பாவத்தில்வீழ்ந்து பலகாலும்
உய்யாநிலையிலாழ்ந்து மயங்கிடாமல்
துய்யாநின்னடியில்வைத் தையாவென்றனையேத்தச்
செய்யாய்வடிவேன்முரு கையாபாமாலைசாத்தச்-சற்று

அத்தனேசமராபுரி முத்தனேபழநிமலைச்
சித்தனேபரங்குன்றம்வாழ் நித்தனேயென்றனைப்பாடும்
பத்தன்குப்புசாமிமீது எந்தநாளுமுன்
சித்தமதிலென்னவாது தயைபுரிந்து
வித்தகமெய்ஞ்ஞானநிலை உத்தமர்களோடுங்கூடி
முத்திவாழுறச்செய்தருள் நித்தமுஞ்சரணங்கோடி- சற்று

சஉ-இராகம்-தர்பார்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தயவில்லையோ தாரகமந்திரந் தனைத்தெளிவிக்கத்
தயவில்லையோ

அநுபல்லவி.

தயவுவைத்திந்த வேளைவந்துநேராய்
தடுத்தாட்கொள்ளத் திருப்போரூரா- தயவு

[சரணங்கள்]

அமரர்போற்றித் துதிக்கும்பொற்பாதனே
ஆறுதிருமுக சற்குருநாதனே
சமரசஞான நிலைதருபோதனே
சர்வஜீவதயாள சங்கீதனே-தயவு

எண்ணுதஎண்ணங்களை யெல்லாம்நண்ணி
ஏழையான்றீமைகள் ஏதேதோபண்ணி
மண்ணுய்ப்போகுப்வாழ் வினையாற்குண்ணி!
மயங்கித்திரியும் வஞ்சகனென்றெண்ணி-தயவு

முழுதுஞ்சோதனை செய்வதோமுலனே
மூடனென்றென்னை யறியாயோலோலனே

தொழும்அடியார்க் கருள்செய்குசீலனே
தொண்டன்குப்புசாமி துதிக்கும்வேலனே-தயவு

சங இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

நானெப்போதுதான்காணுவேன்-உனதுதிரு
நவரத்நசதங்கைப்பொற்பாதம்

அநுபல்லவி.

வானோர்வணங்கும்போரூர் ஞானோதயமூலனே
கானூர்குறத்திமகிழ் கதிர்வடிவேலனே- நானெ

[சரணங்கள்]

எத்தவலையாலுமிந்தச் சிற்றின்பப்போகத்தொடுத்து
எமன்வருவானென்றெண்ணும்ரக்கமில்லாமற்கெடுத்து
பந்தப்படுத்தும்பாசப் பவக்கடலைவிடுத்துப்
பணியுந்நின்னடியார்கள் பாதங்களையடுத்து-நானெ

அல்லும்பகலும்பர மாநந்தக்கூத்தாடி
அருட்செயலேதோவென் றநுதினமுனைநாடிச்
சொல்லுமென்றுயர்தீரத் தொண்டர்களுடன்கூடிச்
சுகந்தருங்கதிபெறத் தொழுதுன்புகழைப்பாடி-நானெ

சிதம்பரசாமிக்குத் தெரிசனந்தந்தபாதம்
சிறைதீர்ந்துநக்கீரர் சேவிக்குந்திருப்பாதம்
இதவருணகிரியார் எத்தித்துதித்தபாதம்
என்குப்புசாமியை யீடேற்றவரும்பாதம்-நானெ

சச-இராகம்-ஆனந்தபைரவி.

பல்லவி.

நம்புமடிமையைக்காப்பதுன்பாரம்-இது
நிதியென்றநீதிநித்நாளிற்செய் வதுநானுபகாரம்

அநுபல்லவி.

உம்பர்தொழுஞ்சம ராபுரிவாசனே
உனையல்லால்துணை யார்முருகேசனே
நம்பு

[சரணங்கள்.]

அருணகிரியார்தம்மைக் காத்தவனே-முருகாவென்றோர்தையல்
அழைக்கவந்தவள்துயரந் தீர்த்தவனே

கருணைக்கடலே வாதவலிகுன்மம்
காசநோய்முதல் நீக்குவதேதன்மம்
பெரிதோஇதுசெய்வ தேனிந்தவர்மம்
பேதையறியுமோ நினதுமர்மம்
நம்பு

வள்ளிதெய்வானைமகிழு மோகனே-சதுர்வேதமுடிவில்
வளருஞ்சச்சிதாநந்த வைபோகனே

கள்ளப்புலனைந்தின் வழியடைத்தாறு
கனகவரையைத் தாண்டிநற்பேறு
கொள்ளுமெய்ஞ்ஞானிகள் சொற்படிநாடிக்
குலதெய்வமாக நினைத்துக்கொண்டாடி
நம்பு

ஆலமுனுண்டவன் மகனீயல்லவோ-நவவீரர்போற்றும்
ஆறுமுகனேநா னின்னமுஞ்சொல்லவோ

பால்ன்மேலிந்தப் பராமுகமேனோ
பத்தியேயில்லை யெனுங்குறைதானோ
கோலத்தகர்ப்பரி யேறுஞ்சுசீலனே
குப்புசாமிதொழுங் குழந்தைவேலனே
நம்பு

சரு-இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

கடைக்கண்பாராமுரு கையா-எங்கள்
கந்தாபன்னிரு கையா

அநுபல்லவி.

அடுத்துவருந்தொண்டரைத் தடுத்தாட்கொள்ளும்போரூரா
கடைக்கண்

[சரணங்கள்]

பராமுகஞ் செய்யலாமோ-சமுசாரப்
பாரம்பொறுக்கப் போமோ
இராவும்பகலுமிந்த எக்கத்தால்மெலியாறு
எந்நாளுங்குறைவிலா திருக்கவந்திப்போது
கடை

நினைக்கும்வேளைக ளெல்லாம்-புண்ணாய்
நெஞ்சுகலங்குது பொல்லா
வினைக்குளகப்படாதிவ் வேளையிற்கைதூக்கி
வேண்டியவரந்தந்தே விமலாவென்முகம்நோக்கிக்
கடை

மரகதமயி லோனே-வள்ளி
மருவும்திண் புயத்தோனே
சரவணபவசிவ ஷண்முகஅன்பர்நேயா
தஞ்சமென்றேத்துங்குப்பு சாமிக்கருள்சகாயா
கடைக்க

சகூ-இராகம்-அம்ஸத்தொனி-தாளம்-சாப்பு.

பல்லவி.

சமராபுரித்தெய்வமே-உலகிலாறு
சமயங்களுக்குந்தெய்வமே

அநுபல்லவி.

அமராபதிதெய்வம் ஆறுமாமுகதெய்வம்
குமாராநமாவென்றுகூறுவோர்க்கருள்தெய்வம்
சமராபுரி

[சரணங்கள்]

பாண்டியன்வெப்புநோயைப் பற்றறுத்திட்டதெய்வம்
வேண்டியவரங்களை விரைந்தன்பர்க்கீயுந்தெய்வம்
ஆண்டிவேடங்கண்டுவள்ளி யம்மைமகிழுந்தெய்வம்
தாண்டிமயிலேறிவந்து தமியனைக்காக்குந்தெய்வம்
சமராபுரி

மூலாதாரமுடிவில் நின்றமுதற்றெய்வம்
நாலாமறைகளைந் நாளுந் துதிக்குந்தெய்வம்
ஆலாலவிடமுண்ட அமலனளித்ததெய்வம்
வேலாயுதங்கொண்டு சூரனைவென்றதெய்வம்
சமராபுரி

நித்தியமானதெய்வம் நிஷ்க்களமானதெய்வம்
சத்தியப்பொருள்காட்டிச் சமணரைவாட்டுந்தெய்வம்
முத்திநிலையுதவு முத்துக்குமாரதெய்வம்
பத்திசெய்குப்புசாமி பணிந்துலகைகூப்புந்தெய்வம்
சமராபுரி

---

சஎ-இராகம்-கேதாரம்-தாளம்- ரூபகம்.

பல்லவி.

வேலாயுத வேலாயுத வேலாயுதநமவே-வடி.

அநுபல்லவி

சீலாதிருப் போரூர்க்கண்ணிய
காலாயுத சுப்பிரமண்ணிய - வேலாயுத

[சரணங்கள்.]

அறுமீன்தனக் கருள்செய்தாழ்
அறுத்தேபரங் குன்றம்வாழ்- வேலாயுத

செந்தார்மேவு மெந்தாய்மதி
தந்தாளுவாய் உன்தாள்கெதி- வேலாயுத

திருவாவினன் குடியில்வளர்
குருவேதொண்ட ருளம்வாய்ந்தொளிர்- வேலாயுத

திருவேரகந் தனில்வாழ்ஆதி
உருவேதேவ தருவேஜோதி- வேலாயுத

குன்றுதோறுடல் புரியுந்தேவே
நின்றுவானவர் பரவுங்கோவே- வேலாயுத

பழமாமுதிர் சோலைக்கொரு
குழகாவெழி லுமையாள்தரு- வேலாயுத

சேல்தமிழ்க் குவந்தாயிரம்
பேரும்பெற வளித்தோய்வரம்- வேலாயுத

உனைநம்பியு மின்னம்முன்னை
வினையுந்தொட லாமோஎன்னை- வேலாயுத

எல்லாமெடுத் துரைத்தும்நெஞ்சம்
கல்லாகிலென் செய்வேன்தஞ்சம்- வேலாயுத

வாராயென்முன் தீராய்துயர்
பாராய்கடைக் கண்ணாலுயர்- வேலாயுத

கண்ணால்வலைப் பூட்டுந்திய
பெண்ணார்மய லோட்டுஞ்ஜெய- வேலாயுத

ஆறுமாமுக நாதாமயில்
ஏறுமாமலர்ப் பாதாஅயில்- வேலாயுத

சூரன்னைமற் றனை வென்றமாதவ
வீரர்வாழ்த்திடும் சரவணபவ- வேலாயுத

மலமற்றவெங் குருசம்பந்தா
குலமுற்றுமீ டேறச்செய்கந்தா- வேலாயுத

சிறியேன்குப்பு சாமிநண்ணும்
குறியின்படி கிருபைபண்ணும்- வேலாயுத

## ௯அ-இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

இச்சமயத்தெனைக்கண் பாரா
திருப்பதேனேமுத்துக்கு மாரா
பச்சைக்கலப மயூரா
பார்புகழுந்திருப் போரூரா

அன்பரைக்காக்குஞ் சகாயா
அருமறைகூறுஞ்செவ் வாயா
வன்பவப்பிணிதீர்க்குந் தாயா
வளங்கொள்திருப்போரூர்க்காங் கேயா

சிறியேனையாளுமை பாலா
தெய்வயானைவள்ளி லோலா
குறியாவோர்குறியுறா சீலா
குகனேதிருப்போரூர்வடி வேலா

சிதம்பரசாமிக்கருள் கோவே
சின்மயானந்தந்தருங் காவே
இதம்பெறுவாருண்மலர் பூவே
எழில்திருப்போரூரில்வாழ் தேவே

நான்சொல்லுங்குறையைநீ கேட்டு
நமன்வந்தால்வேல்கொண்டு வாட்டு
மான்விழிப்பெண்கள்மய லோட்டு
மகிழ்போரூராநல்வழி காட்டு

குப்புசாமிதுதிசெம் பிரா
குன்றுதோறுடல்புரி வீரா
எப்புவியோர்க்குமா தாரா
எந்தப்போரூராவோய் யாரா

சக-இராகம்-சௌராஷ்டிரம்-தாளம்-ஆதி.

பல்லவி.

உன்னைப்போலொருதெய்வம் இங்காரொனக்கையனே
உதவிசெய் முருகையனே

அநுபல்லவி.

அன்னைதந்தையென்றுன்னை அநுதினம்நம்புமென்னை
அடிக்கடிசோதிக்க லாகுமோஈதென்னை
அமராபதியர சாளுங்கெம்பிரனே
குமராதிருச்சம ராபுரியூரனே
உன்னை

[சரணங்கள்]

சிதம்பரசாமிக்குத் தெரிசனந்தந்தாயென்று
ஜெகத்தோர்சொலும்வார்த்தையும் பொய்தானோ-முன்னே
சிறைதீர்ந்துநக்கீரனுந் திருவடிநிழல்தன்னைச்
சேர்ந்திருந்தானென்பதும் பொய்தானோ
மதங்கொண்டவசுரர்செய் வருத்தம்நீங்கிமக
வானரசுசெய்ததும் பொய்தானோ - பெரு
மாதவக்குறுமுனி பவக்கடல்விட்டெழுந்து
மகிமைபெற்றிருந்ததும் பொய்தானோ
மாசிலாத பரஞ்சுடரோகேள்
பேசுவாய்திரு வாய்திறந்திந்நாள்
உன்னை

அடைக்கலம்புகுமிந்த அடிமையைக்கைவிடாமல்
ஆளவேண்டுங்கந்த சாமி-முன்
அறியாமலேதேதோ சிறியேன்செய்யும்பிழையை
அகத்திற்கொள்ளலாகாதென் சாமி
மடக்கித்தங்கள்வழியி லடக்கிக்கொள்ளுமாதர்கள்
மையலையோட்டுமுத்த சாமி-நிதம்
மன்னுஞ்சுற்றத்தவருக் கெந்நாளுங்குறைவின்றி
வாழ்வுதருவாயாறுமுக சாமி

வளர்புனவள்ளிதெய் வானைமணாளனே
தளர்வறஎன்துயர் தீர்க்குந்தயாளனே
உன்னை
உல்கையொருநொடியி லுவந்துமயின்மீதேறி
யோடியேவந்தவிசு வாசனே- அரனை
ஒங்குமாங்கனிகேட்கப் பாங்காய்ப்பழநியேயென்
றுரைக்கமகிழ்சிவப்பிர காசனே
மலரயனறியாத பிரணவப்பொருளைமா
தேவர்க்குதவுமுப தேசனே- மண
மலர்கொண்டர்ச்சனைசெய்து வணங்கிநின்பதமேத்தும்
வழியருள்கந்த கைலாசனே
மைந்தனுனகுப்பு சாமிகீர்த்தநலோலா
செந்தில்வாழுந்தே ஜோமயவடிவேலா
உன்னைப்போலொரு

௫௰-இராகம்-அட்டாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுவரையிலும்நா னநுபவித்ததுபோதும்
இனியுன்சுகம் வேணுமெப்போதும்

அநுபல்லவி.

மதுவார்மலர்ப்பொழிற் போரூரில்வாழுஞ்செவ்
வாயனே தூயனே அன்பர்சகாயனே
இதுவரை

[சரணங்கள்]

சூதுவாதுகள் செய்யும்-மிகக்கொடிய
துஷ்டருறவைக் கொய்யும்
ஏதுமொன்றுமறி யாதெனைக்காத்திடும்
ஈசனே நேசனே சூரியப்பிரகாசனே
இதுவரை

ஜென்மம்வந்த நாள்முதலாய்-அரிவையரைச்
சேர்ந்தென்று மருவுதலாய்
நன்மைதீமையென் றுணராளெனக்கருள்
நாதனே போதனே மாயாதீதனே
இதுவரை

வாதபித்தஜபம் செய்யும்-மயக்கத்தால்
வருந்தாதகிருபை பெய்யும்
பாதந்துதிசெய்குப்பு சாமிக்குத்துணைவரும்
பதியே நிதியே வேதில்லைகதியே
இதுவரை

சுக-இராகம்-சகுன-தாளம்-சம்பை.

பல்லவி.

இனியுழல லாகாதிந்தக் காயம்-தேவர்க்
கிறைவனே யுனைத்துதிக்க எனக்கரு ளுபாயம்

அநுபல்லவி.

மனமுருகியடியார்கள் வாழ்த்துந்திருப்போரூரா
மங்கையர்மேல்மோகங்கொண்டு மயங்காமலூரூராய்
இனியுழல

[சரணங்கள்.]

தத்துவத்தால்வந்தஇந்தக் கூடு-இதனை
சாமான்யரறிவாரோ தான்படும்பாடு
முத்தமிழ்நக்கீரர்முதல் நாடு- நித்திய
முதல்வனேயெனக்களிப்பாய் மோக்ஷஞானவீடு
இனியுழல

பெண்டுபிள்ளைகளால்மன நையாதே- நாளும்
பெற்றவர்கள்மனங்கலங்கப் பேசவையாதே
கண்டோரைப்பார்த்துப் பொய்யாதே-எழிற்
கதிர்வேலாதேகிங்காலங் காக்கச்செய்யாதே
இனியுழல

அன்றுநீசொன்னநிலை நாடி-நெஞ்சத்
தானந்தமெய்ஞ்ஞான அறிவுதனிற்கூடி
என்றிருப்பேனுன்புகழைப் பாடி-மகிழ்ந்
தேத்திவணங்காமல்வீண் எண்ணங்கொண்டாடி
இனியுழல

தேகஅபிமானமதை யோட்டு-ஞான
தேசிகநின்திருவடியென் சென்னிமிசைச்சூட்டு
சாகுந்துயரொன்பதனை வாட்டு-வாட்டிச்
சாயுச்சியபதத்தினிற் சதாகாலங்கூட்டு
இனியுழல

நாயேன்குப்புசாமிதனை யாளாய்-வேத
நாதாந்தத்தினிலாடு நளினமலர்த்தாளா
தீயவசுரரைவென்ற தோளா-எங்கள்
தெய்வானைவள்ளிமகிழ் திவ்வியகுணாளா
இனியுழல

ருஉ-இராகம்-சாவேரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

இந்தப்பொய்வாழ்வுக்கேயாளா-என்னை
இனியமைக்காதே தயாளா

அநுபல்லவி.

பந்தநீக்கும்போரூர்வாழ் பன்னிருகையனே
பைங்கொடிவள்ளியம்மை பாகாமுருகையனே
இந்தப்

[சரணங்கள்.]

அவரவர்கள்வினையின் அளவாய்நடத்தவல்ல
ஆண்டவனீயேயென் றறிந்துநான்சொல்லச்சொல்லக்
கவலைதரும்விஷயக் காட்டிலென்மனஞ்செல்லக்
காட்டிக்கொடுப்பதழ கோவிதுநல்லதல்ல
இந்தப்

முழுதநம்பியிதை மோசம்போனேனநாடி
மொழியவென்றாலென்றால் முடியுமோதிதந்தேடிப்
பொழுதுபோமளவும் போராட்டத்தால்வாடிப்
போகாதிருக்கவைத்தாற் புண்ணியமனந்தங்கோடி
இந்தப்

குருவாகச்சிதம்பர சாமிக்குதவுந்தாயே
குப்புசாமிதுதி கொண்டசங்கரன்சேயே
அருணகிரிநாதர்தன் பகற்றினையன்றுநீயே
அந்தஆவல்கொண்டுன்னை அடைந்தேனெனைக்காப்பாயே
இந்தப்

௫௯-இராகம்-வராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

உனதுசெயலேதோநானறியேன்-உனையன்றி
உற்றதுணையில்லாத சிறியேன்

அநுபல்லவி.

அனவரதத்துதிமெய் யடியார்தொழுஞ்சம்பந்தா
அண்டக்கலம்புகுமென்னை யாட்கொள்ளும்போரூர்க்கந்தா
உனதுசெயலேதோ

[சரணங்கள்]

அக்கிரமமாதர்மயலி லழுந்திடச்செய்வையோ
அல்லாமல்நின்சுகம் தழைந்திடச்செய்வையோ
மிக்கபாசமடுவில் வீழ்ந்திடச்செய்வையோ
வேதாந்தஇன்பவீட்டில் வாழ்ந்திடச்செய்வையோ
உனதுசெயலேதோ

தத்துவக்கூட்டத்தைத் தாண்டிடவருவையோ
சமரசஞானநிலை பூண்டிடவருவையோ
சித்தமொத்துன்னடியை வேண்டிடவருவையோ
தேசிகனேயெனை ஆண்டிடவருவையோ
உனதுசெயலேதோ

காலன்வாராமுன்னங் களித்துவந்தருள்வையோ
கண்களிகூரவே காக்ஷிதந்தருள்வையோ
சீலமெய்ஞ்ஞானகுரு வாகவந்தருள்வையோ
சீர்பெறக்குப்புசாமிக் குளங்கனிந்தருள்வையோ
உனதுசெயலேதோ

---

ருச-இராகம்-எமுனா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தேவர்சேனாபதியே-சர்வ-ஜீவதயாநிதியே

அநுபல்லவி.

நாவலர்துதிசமராபுரி-நாதா-பத்ம-பாதா-தாதா
தேவர்

[சரணங்கள்]

சமணரைக்கழுவேற்றுஞான சம்பந்தனேயெனக்குமோன
சமரசமொழிஅமிர்தமூட்டுந் தாயே வருவாயே நீயே
தேவர்

அருணகிரியார்தவமீடேற ஆண்டவனேயென்னுளந்தேறக்
கருணைசெய்யினியாகிலும்பன்னிரு கையா முத்தையா துய்யா
தேவர்

இன்னமேனோஎன்மேல்வாது எங்கள்துரையேயிதுதகாது
மன்னுந்திரிபுரசுந்தரிபெற்ற மகனே சண்முகனே குகனே
தேவர்

அரகரவெனநிதங்கொண்டாடி அடிமைகுப்புசாமி பாடிப்
பரவும்வள்ளிதெய்வானைமோகனே பரனே தயாபரனே யரனே
தேவர்

---

ருரு-இராகம்-ஆரபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கருணைசெய் வடிவேலா-இது
தருணமா துரைபாலா

அநுபல்லவி.

கருணைசெய்வடிவேலா காங்கேயாமறைமூலா
கானக்குறத்திலோலா கருதன்பரநுகூலா
கந்தா கந்தா பழநிவாழ் கந்தா
கருணைசெய்

[ சரணங்கள் ]

கோலமயூர வாகனா-தெய்வ
குஞ்சரிமகிழ்மோகனா
மூலகுண்டலி தாண்டி மூன்றுமண் டலந்தாண்டி
மேல்அறிதத்தை வேண்டி மேவப்பழநியாண்டி
வேதா வேதா வேதவிநோதா
கருணைசெய்

புத்தியில்லாத கொடியேன்-உனது
புகழ்மாலையொன்றும்படியேன்
தத்திக்குதித்தோடித் தையலார்மையல்நாடிப்
பொய்த்தவுடலப்வாடிப் போகாதுனைக்கொண்டாடிப்
போற்றேன் போற்றேன் மலர்கொண்டுபோற்றேன்
கருணைசெய்

ஆறுமாமுகத் தோனே-படைவீ
டாறெனுந் தலத்தோனே
வீறுமுனைத் தவிர்ந்து வேறில்லையென்றறிந்து
கூறுங்குருவாய் வந்து குப்புசாமிமகிழ்ந்து
கொஞ்சுங் கொஞ்சுங் கொஞ்சும் சதங்கைப்பாதம்
கருணைசெய்

௯௬ இராகம்-ஸ்ரீரஞ்சனி தாளம்-ஆதி.

பல்லவி.

இனியாருடன்சொல்லி முறையிடுவேன்

அநுபல்லவி.

தனியாய்விளங்கும்போரூர்ச் சண்முக சுந்தரனே
சரவணபவ ஓம் சடாக்ஷர மந்திரனே
இனியாருடன்

[சரணங்கள்]

எத்தனைசொன்னாலும் ஏறிட்டுப்பாராமல்
இருப்பதழகோவின்னம் என்துயர்தீராமல்
சித்தமோர்நிலைநின்று சித்திக்கநில்லாமல்
தேடுமிவ்வேளையில்யார் திக்குநின்னையல்லாமல்
இனியாருடன்

வஞ்சனைசெய்யுமைவர் வாசலடைத்தாறு
வரையுங்கடந்துஞான மார்க்கத்திற்சென்றுமீறு
நெஞ்சையடக்கியோங்கும் நித்தியானந்தப்பேறு
நிச்சயமுறவேதத் துச்சியின்பொருள்கூறு
இனியாருடன்

அடைக்கலம்புகுந்தொண்டர்க் கானந்தந்தருந்தேவே
அன்புசெய்குப்புசாமி யகத்துள்மலரும்பூவே
கடைக்கண்ணால்நோக்கியண்டர் கவலையகற்றுங்காவே
காலன்வருமுன்னமே கதிதரவருங்கோவே
இனியாருடன்

௫௭-இராகம்-அட்டாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

இருக்கிறானேயல்லாமல் இல்லாமற்போகவில்லை
இனிநமக்கென்னபயம்நெஞ்சமே

அநுபல்லவி.

இருக்குவேதப்பொருள்நீ யென்றேத்துமால்மருகன்
எமதுகுறையைத்தீர்க்கும் எழிற்போரூர்முருகன்

இருக்கிறானே

[சரணங்கள்]

மடைவாயில்காத்திருக்குங் கொக்கதுபோல்நமன்
மறைந்தவன்செய்யுமோச மென்செய்யும்-அதை
மறந்துபந்தம்விட்டெல்லாம் வடிவேலன்செயலென்று
மதித்துச்சிந்தித்தால்நமது மலநையும்-என்றும்
தடையிலாவானந்த சாகரத்துள்ளோங்கிச்
சர்வபரிபூரணமாய் எவ்வுயிர்க்குங்காரணமாய்
இருக்கிறானே

நானெனுமஞ்ஞான நாட்டம்வைத்திந்திரசால
நானாவிகாரமாயைக் கனதூல-பேத
நாமரூபமயமாய்நலியாதேசொன்னேன்சொன்னேன்
நாதசிற்பரவெளி யொளிபோலத்-தோன்றும்
மோனசச்சிதானந்த மானசுகாதீத
முத்திஅடைவாய்நேசமாய் நித்தமெங்கணும்வாசமாய்
இருக்கிறானே

அயனொருநாள்கயிலை அரனிடஞ்சென்றுபணிந்
தாலயவாயிற்படி வரும்போது-சதுர்வே
தாகமமுடிவான தாரகப்பொருள்கேட்க
அறிவேனென்றுயேநீ அதையோது-என
பயங்கொண்டுடல்நடுக்கி நிற்குமவனைச்சிறை
டபடுத்திவிடுத்தருள்கன்னியன்தடுத்தெமையாள்சுப்பிரமண்ணியன்
இருக்கிறானே

குப்பமுனிக்குப தேசஞ்செய்குருநாதன்
கோடிசூரியப்பிரகாச மிகுகோலன் - தினம்
குப்புசாமிபோற்றிக் கும்பிடுந்திருப்பாதன்
கோதிலாவுமையரு ளியபாலன்-வேண்டி
நம்பிநிதந்தொழுவோர்க் குதவுந்தீனதயாளன்
நல்லதெய்வயானைகாந்தன் சொல்லருங்குறிஞ்சிவேந்தன்
இருக்கிறானே

௫௮-இராகம்-சாரங்கா-தாளம்-ரூபகம்

பல்லவி.

இதுநல்லதினமே மனமே இதுநல்லதினமே

அநுபல்லவி.

பதுமமலர்த்தடஞ் சூழும்போரூருறை
பாலன் சீலன் வடிவேலன் றனைக்காண

இதுநல்ல

[சரணங்கள்]

எண்ணியவெண்ணங்க ளெல்லாங்கைகூட்டுவான்
இயமன்வரும்போ தெதிர்த்தடித்தோட்டுவான்
புண்ணியமான நிலைதனைக்காட்டுவான்
போதன் வேதன் குருநாதன் றனைக்காண

இதுநல்ல

அல்லும்பகலுமென் னகத்தில்வாசமாய்
அமர்ந்தருளுமெய்ஞ் ஞானமேநேசமாய்
நல்குமுருகனை யென்றும்விஸ்வாசமாய்
நாடும்அடியர்கொண் டாடுவோனைக்காண

இதுநல்ல

சரவணந்தனில் வளர்முத்தையனைத்
தாசன்குப்புசாமி போற்றுமெய்த்துய்யனைத்
திரப்பெறும்வடி வேலேந்துங்கையனைத்
தீரசேவற்கொடி வீரன்தனைக்காண

இதுநல்ல

௫௯-இராகம்-ஆகிரி-தாளம் -சாப்பு

பல்லவி.

என்செயலாவதொன்று மில்லையே-இனி
உன்செயலல்லாதுண்டோ சொல்லையே

அநுபல்லவி.

பொன்செய்மதில்சூழும் போரூர்மாநகர்வாழும்
பன்னியனேபாலசுப்பிர மண்யலாவண்யனே
என்செயலாவது

[சரணங்கள்]

ஆட்டிவைப்பவனும்நீ என்னுள்நின்று
ஆடுகின்றவனும்நீ மோனசுகம்
நாட்டிவைப்பவனும்நீ எப்பொருளும்
நானெனவருபவனும்நீ என்றெனக்குக்
காட்டுங்குருவேஜீவ காருண்யனேதேவர்க்
காராவமுதேயின்று வாராய்கடைக்கண்பாராய்
என்செயலாவது

ஊனுமுடலமும்நீ அதைவளர்க்க
ஓங்குந்தத்துவமும்நீ உயிர்க்குயிராய்
ஆனஜீவாத்மாவும்நீ மும்மலம்விட்ட
அதிவானந்தனும்நீ அதுவதுவான
ஞானாகாரந்தானே தானாகுஞ்சோமனே
தாதாஇன்னமென்மேல் வாதாஅருள்செய்தாதா
என்செயலாவது

ஆறுமுகவனும்நீ மேலொளிரும்
ஆறாதாரமும்நீ ஒய்யாரமாய்
ஏறுமயூரனும்நீ வள்ளிதெய்வ
யானைமணாளனும்நீ மெய்ஞ்ஞானிகள்
கூறும்பதத்தைநாடும் குப்புசாமிகொண்டாடும்
கோனேஅன்பருள்ளத் தேனேஎம்பெருமானே
என்செயலாவது

௬௭-இராகம்-காபி-தாளம்-சாப்பு.

பல்லவி.

உபதேசஞ்செய்தாரோ-மகாவாக்கிய
உபதேசஞ்செய்தாரோ

அநுபல்லவி.

தபயோகியருளத்தில் தாண்டவஞ்செய்யும்பாதன்
சமரமாபுரிசிவ சண்முககுருநாதன்
உபதேசஞ்செய்தாரோ

[சரணங்கள்]

ஆன்மதத்துவம்வித்தியா தத்துவத்தைப்பிரித்து
அதற்கப்பால்சுத்ததத்துவம் ஈதென்றுதெரிவித்து
வான்மதிபோல்விளங்கும் மௌனநிலையில்நின்று
வந்தித்துமுப்பதத்தால் வாழ்குவாய்நீயென்று
உபதேசஞ்சொய்தாரோ

ஒன்றுமறியாவென்னை யுள்ளமுவந்தழைத்து
ஓடுமறுநிபுலன் ஓடாதிருக்கவைத்துத்
தன்திருவடிச்செந்தா மரைமலர்முடிசூட்டித்
தானறிவானசச்சி தானந்தநிலைநாட்டி
உபதேசஞ்செய்தாரோ

நாமரூபம்நீயல்ல நானெனும்போதமல்ல
நாதாந்தவேதாந்த ஞாஞேயனீநல்ல
நேமமுடன்குப்பு சாமிதொழுமயூரன்
நினைப்பறவேநினைந்து நில்லென்றுபோரூரன்
உபதேசஞ்செய்தாரோ

---

ரூக-இராகம்-பந்துவராளி-தாளம்-சாப்பு

பல்லவி.

நல்லமருந்திதுவே-மெய்யன்பருக்கு
நல்லமருந்திதுவே

அநுபல்லவி.

புல்லரறியாத்திருப் போரூர்தனிலுறையும்
புண்ணியசுப்பிரமண்ணிய கண்ணியமானமருந்து
நல்லமருந்திதுவே

[சரணங்கள்]

அமரர்துயரந்தீர்த்த ஆறுமுகமருந்து
ஆராவமுதஞான ஆநந்தமாமருந்து
சமர்செய்தசுரரைச் சங்கரித்தமருந்து
சடாக்ஷரமந்திரோச் சாடனமருந்து
நல்லமருந்திதுவே

கருணைபுரிந்தன்பரைக் காக்குமருந்து
காலனையணுகாமல் காக்ஷிதருமருந்து
திருமுருகாற்றுப்படை செப்பவருமருந்து
திகழருணகிரியார் தெரிசனைசெய்மருந்து
நல்லமருந்திதுவே

ஆவினைமேய்க்குமாயன் அகமகிழ்கூர்மருந்து
ஆயுள்வேதத்தோராலும் அறியப்படாமருந்து
தேனிலுமினிமையாய்த் தித்தித்திடுமருந்து
தேவாதிமுனிவர்க்குந் தெவிட்டாத்திருமருந்து
நல்லமருந்திதுவே

அகிலசராசரத்துள் ஆடும்பெருமருந்து
அருதாரமுடிவுக் கப்பால்வளர்மருந்து
சகலவினையுந்தீர்க்கத் தானாய்த்தோன்றுமருந்து
சாயுச்சியமளிக்குஞ் சமராபுரிமருந்து
நல்லமருந்திதுவே

மறுஜெனனமெடுக்கா வகைசெய்யருமருந்து
வள்ளிதெய்வானையிரு மருங்கினில்வாழ்மருந்து
குறுமுனிக்குபதேசங் கூறுங்குருமருந்து
குப்புசாமிநிதமுங் கும்பிட்டேத்துமருந்து
நல்லமருந்திதுவே

௬௨-இராகம்-தனுசரி-தாளம்-ஆதி.

பல்லவி.

தானறிவாவதே ஆனந்தம்-தான்
சாக்ஷியாய்நிற்பதே ஆனந்தம்

அநுபல்லவி.

வானவர்தொழுஞ்சம ராபுரிதன்னைநாடி
வணங்கும்அடியாரவர் மலரடிமுடிசூடித்
தானறிவாவதே

[சரணங்கள்.]

மூலாதாரமும் ஆனந்தம்-அதில்
முக்கோணமாவதும் ஆனந்தம்
நாலாமிதழ்மலர் ஆனந்தம்-உள்ளே
நடுவோங்காரமும் ஆனந்தம்
மேலாய்விளங்கும் விளக்கொளியைக்கண்டு
காலாதீதக் கருணாரசமுண்டு
தானறிவாவதே

சுவாதிஷ்டானமும் ஆனந்தம்-சர
சோதியிருப்பதும் ஆனந்தம்
தவாமணிபூரகம் ஆனந்தம்-ஜெகந்
தானாய்விளங்குவ தானந்தம்
சிவாசிவாசியென்றே வெளிநின்று
சின்மயமான அநுகதஞ்சென்று
தானறிவாவதே

விசுத்திவினோதமும் ஆனந்தம்-நுதல்
மேலாக்கினைத்தலம் ஆனந்தம்
பொசிக்குமதியமுதம் ஆனந்தம்-பரி
பூரணமாவதும் ஆனந்தம்
இசைக்குங்குப்புசாமிக் கிரங்கியருள்களித்து
எழில்சமராபுரி முருகனையுளம்வைத்துத்
தானறிவாவதே

௬௬-இராகம்-சாரங்கா-தாளம்-சாப்பு.

பல்லவி.

திருவெண்ணீ றிட்டாரோ-முன்செய்த
தீவினைமுழுதும்விட்டாரோ

அநுபல்லவி.

மருமலிநியமல லாங்கனைமாரன்
வணங்கும்பேரழகுரு வண்போரூரான்
திருவெண்ணீறிட்டாரோ

[சரணங்கள்.]

மந்திரமாவதுநீறே-திரு மாலயனுவதுநீறே
சுந்தரமாவதுநீறே-ஜெகந் தோன்றவளிப்பதுநீறே
பந்தமில்ஞானசம் பந்தராகமருள்
பாண்டியன்சுரநோயைப் பாழ்படச்செய்தருள்
திருவெண்ணீறிட்டாரோ

சமணரையழிப்பது நீறே-சைவ சமயத்திலுள்ளதுநீறே
திமிரத்தையொழிப்பதும் நீறே-ஞான செல்வத்தைத்தருவதுநீறே
குமரசடாக்ஷர சரவணபவகன
குழகவநகுக சிவகுருநமவென
திருவெண்ணீறிட்டாரோ

ஆநந்தங்கொடுப்பதுநீறே-உயிர்க் காதாரமாவதுநீறே
தானந்தமாவது நீறே-சர்வ சாக்ஷியாய்நிற்பதும்நீறே
ஊனந்தவிர்த்துள்ளே யொளிதனைக்காட்டி
உணர்த்தும்பேரின்பநிலை மனத்தினைநாட்டி
திருவெண்ணீறிட்டாரோ

துஷ்டர்களைத்தொலைத்திடும்நீறே-பில்லி- சூனியம்தவிர்ப்பதுநீறே
அஷ்டமாசித்தியும் நீறே தினம்-அருந்தவரணிவதுநீறே
இஷ்டமுடனேகுப்பு சாமிதொழும்நக்கீரன்
இடுக்கணகற்றமயில் எதிவருமொய்யாரன்
திருவெண்ணீறிட்டாரோ

சுச-இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு

பல்லவி.

இரதவுற்சவ மதுபாரும்-முரு
கேசனைக்கண்டுகளிகூரும்

அநுபல்லவி.

சரதஞானந்தரும் சமராபுரிவளர்
சண்மதத்தவர் தலைவணிங்கித
ஷண்முகக்குரு பரனலங்க்ருத
இரதவுற்சவமது

[சரணங்கள்]

ஒருகோடிசூரிய ரென்ன-எழில்
ஓங்கும்பொன்மலைபோல மின்ன
விருதுகொடிகளாட வேதியர்வேதம்பாடக்
கருதியன்பர்கொண்டாடக் கதிர்மணியொலிநீடக்
ககனதேவர்கள் யாருங்களித்திடும்
கமனமாருத பாகனடத்திடும்
இரதவுற்சவமது

செங்கரும்புங்கதலிச் சோலை-எங்குந்
தேங்கும்பசுங்கமுகஞ் சாலை
தொங்கும்பொன்னரிமாலை தோரணங்களின்மேலைத்
தங்கும்நான்மாடவீதி தனில்வரும்பெருஞ்சோதி
தழைக்குமண்ட கடாகந்தாவிய
சகலசித்திரப் படாமுமேவிய
இரதவுற்சவமது

ஆறிசைவர்திருக் கூட்டம்-மகிழ்சி
வாகமமோதுங்கொண் டாட்டம்
பூதிசாதனமொங்கும் பூரன்னகும்பங்களேந்தப்
பூவேந்தருங்கும்பிட்டுப் போற்றிசெய்யுநாதாந்த
போதர்திருமுறை வாசகஞ்சொல்ல
பூமியதிர்ந்திட ஓடிவரும்நல்ல
இரதவுற்சவமது

வடம்பிடித்தன்பர் நடந்தோடக்-கவி
வாணர்புகழ்ந்துபாடி நாடக்
குடாமுழாபூரிசங்கங் கொண்டலைப்போல்முழங்கக்
கோதானமுதலான பூதானமேவழங்கக்
குலமுந்தண்முனிவர்நன் முத்தர்சேவித
குதுங்கிவருநவ ரத்நஜோபித
இரதவுற்சவமது

அந்தரதுந்துமி யார்ப்ப-இந்திரன்
ஆதியோர்தொழுதுகை கூப்பச்
சுந்தரமாதர்பசுந் தோகைபோல்நடஞ்செய்யத்
தொண்டர்குளிர்பன்னீராச்சோனைமழைபோற்பெய்யச்
சுரதவள்ளிதெய்வ யானையொடுமகிழ்
சரவணோற்பவ னெழுந்தருளும்புகழ்
இரதவுற்சவமது

தம்புருவீணை வாசிக்க-சிவ
தம்பிரான்மார்கள் பூசிக்க
சம்பிரமநாககுர சங்கீதமேளதாள
அம்போதநிபோலார வாரமிகவுநீள
அந்திப்பொழுதி லுவந்துவந்திடும்
கந்தசாமிநற் காக்ஷிதந்திடும்
இரதவுச்சவமது

பார்த்தால்முன்செய்த பாவம்-போகும்-உலகில்
பணியில்ஜென்ம சாபல்லிய-மாகும்
பாத்திரமறிந்தொரு பரதேசிக்கேஅந்த
க்ஷேத்திரத்தொருதானஞ் செய்யிற்கோடியாமுந்தச்
சேவைசெய்துநிதம் வேண்டுங்குப்புசாமி
பாவவினைதீர்க்கும் போரூர்முத்துசாமி
இரதவுற்சவமது

சிவமயம்

# நடேசர்கீர்த்தநம்.

௬௫-இராகம்-கேதாரம்-தாளம்-ஆதி.

பல்லவி.

தில்லைச்சிதம்பரக்கூத் தாடுந்தெய்வமே
சிவகாமிகண்டு மகிழ்தெய்வமே

அநுபல்லவி.

சொல்லைமுதலாக்கொண்டே திருத்தொண்டத்தொகைபாடும்
சுந்தரசாமிக்காகத் தூதுசென்றோனேநீடும்
தில்லைச்சிதம்பர

[சரணங்கள்]

பதஞ்சலிவியாக்கிர பாதரிருவரோத்தப்
பாவலர்பாமாலை பத்தியுடனேசாத்த
இதந்தருந்தேவாரம் இசைகொண்டிடுமெதார்த்த
இயலறுபத்துமூவர்க் கோந்தந்தந்துகாத்த
தில்லைச்சிதம்பர

பிள்ளைமதியணிந்த பித்தனென்றுன்னைச்சொன்ன
பேச்சேசரியாய்க்காண் பிக்கிறீர் இதென்ன
எள்ளத்தனைக்கடைக்கண் ணோறுபட்டாலின்னும்
இருக்குமோஆழ்வினை யெழில்மூவாயிரர்மன்னும்
தில்லைச்சிதம்பர

செஞ்சடைக்கங்கையாடச் செங்கையிலங்கியாடச்
சேனுறுதேவருஞ் சிவசிவாவென்றுநாடத்
தஞ்சமென்றுருப்பு சாமிதொழுதுபாடச்
சதுர்முகன்திருமாலுந் தாளமத்தளம்போடத்
தில்லைச்சிதம்பர

சிவமயம்.

திருப்போரூர்-பிரணவகிரி

# தியாககைலாசநாதர்கீர்த்தநம்.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சங்கரமஹாதேவ-சம்போஹரஹர-சிவ
சங்கரமஹாதேவ-சம்போ

அநுபல்லவி.

புங்கவர்போற்றும் பிரபோத
போரூர்க்கைலாச நாத
சங்கரமஹாதேவ

[சரணங்கள்]

திருஞானசம்பந்தர்க்குத் திருவுமைப்பாலமுதூட்டித்
தேவாரமோதுவித்துத் தெரிசனமுங்காட்டித்
திருச்சின்னமுத்துப்பந்தல் சிவிகைமுதல்தருத்தியாகா
ஜெனகாதிமுனிவர்க்குப தேசஞ்செய்தசிவயோகா
சங்கரமஹாதேவ

அப்பருக்குநீற்றறையை அலர்கமலப்பொய்கையாக்கி
யானைவலம்வந்துதொழ அருட்கண்ணினால்நோக்கிக்
கற்புணையைத்தெப்பமதாய்க் கடலில்நின்றுங்கரையேற்றிக்
காக்ஷிதந்தாண்டமகிழும் கருணாகடாக்ஷமூர்த்தி
சங்கரமஹாதேவ

சுந்தரர்க்கொருமணந்தடுத்துத் தூதுசென்றிருமணமுடித்துச்
சொற்றமிழ்க்கிரங்கிச்செங்கல்லைச் சொர்ணமாக்கிக்கொடுத்து
மைந்தனைமுன்முதலைவாயில் வரவழைத்ததேவேஅந்த
வானவர்பூமாரிதூவ மகிழ்ந்துவெள்ளையானைதந்த
சங்கரமஹாதேவ

மாணிக்கவாசகர்க்கு வளர்குருந்தமரத்தடியில்
மாமறையின்பொருளைத்திரு வாய்மலர்ந்திப்படியில்
ஆணவமாமலமுமொழித் தானந்தநிலையில்வைத்த
ஆண்டவனேகுப்புசாமி அடிமைவணங்குஞ்ஜெகப்பிரசித்த

சங்கரமஹாதேவ

திருப்போரூர்-பிரணவகிரி

# பாலாம்பிகையம்மைகீர்த்தநம்.

சுஎ-இராகம்-பியாகடை-தாளம்-ரூபகம்

பல்லவி.

வந்தருள்வாயே உனைநாளும்
வாழ்த்தித்துதித்தேத்துமென்தன்முன்-வந்தருள்வாயே

அநுபல்லவி.

சுந்தரமுகஸ்ரீங்காரி சுரர்தொழவருஹ்ரீங்காரி
கந்தனைத்தருங்கௌமாரி காமாக்ஷிஓங்காரி
வந்தருள்வாயே

[சரணங்கள்]

தங்குமிமயகிரிராஜன் தவத்தினிற்குளமிரங்கிவந்து
சகலபுவனமனைத்துஞ்செழிக்கத் தவங்கள்பலவும்புரிந்து
சங்கரனிடம்வாழும்விரி சத்யஞானவமுதவாரி
மங்கையர்க்குளலங்காரி மாதேவிகௌமாரி
வந்தருள்வாயே

அந்தணர்கள்சிவயோகர் அருமுனிவர்மறைபாட
அயனுமாலுமுடிவணங்க அரனுமுன்னின்றாட
சந்ததநடமிடுமொய்யாரி தத்வமாயாசூத்ரதாரி
கந்தரந்தவழ்மதில்சூழ்போரிக் கைலாசநாதர்பாரி
வந்தருள்வாயே [க்கிப்

பாரமாஎனைக்காக்கக்கடைக்கண் பாரம்மாயென்றன்முகத்தைநோ
பாதகமலமுடியிற்சூட்டிப் பாதகமலம்போக்கிச்

கோரசூரசம்ஹாரி குப்புசாமிக்குபகாரி
பாருளோர்கள்புகழ்விஸ்த்தாரி பாலாம்பிகையுதாரி
வந்தருள்வாயே

## திருப்போரூர்-கந்தசாமி பதம்.

௬அ-இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

சொற்பனங்கண்டேனே அடிமானே
சொற்பனங்கண்டேனே

அநுபல்லவி.

அற்புதத்திருப்போரூர் சுப்பிரமண்யன்வந்து
அலர்ந்தபஞ்சணைமீதினிலே தய்ய
அனங்கவேளெனவிலைகளை செய்ய சொற்பனங்

[சரணங்கள்]

பன்னிருகரத்தினால் என்னையெடுத்தேயிதழ்
பருகிமுத்தாடிமிகு மோகங்-கொண்டேன்
பருத்தவிருகொங்கையின் முனையைநெருடிமெள்ளப்
பசப்பியெனையணைந்த சோகந்-தீர
மன்றுமுப்பழங்கூட்டி யின்னமுதாகவூட்டி
மனமொத்தவென்றனைக் கண்ணேயென்று
மகிழ்உற்றவர் பேசிடநானின்று
சொற்பனங்கண்டேனே

கன்னியென்றொருமாதை யுன்னியவளோடுநீர்
கலவித்தொழில்செய்ததைப் பாரும்-முகத்திற்
காட்டுதேபற்குறிய மார்பில்நகக்குறியும்
காணச்செய்தவளைப்போய்ச் சேரும்-அங்கே
உன்னதமாகக்கூடிச் சன்னதங்கொண்டாடி

உவந்தகோலத்தைக் காட்டவந்தீர்நல்ல
தோதுமென்றேவெகு கோபமாய்நான்சொல்லச்
சொற்பனங்கண்டேனே

அன்பன்குப்புசாமி துன்பமகற்றும்வேலன்
அருகில்வந்துமனந் தேறச்-சொல்லி
ஆணையிட்டென்தலையி லுனைவிடவேறுபெண்ணை
அணையேனென்றவர்திடங் கூறப்-பின்பு
இன்பச்சுருள்மடித்து முன்புநான்கடித்து
ஈந்தென துவாய் முத்தந்தந்திட
ஏர்பெறுசூரியனுங் காணவந்திட
சொற்பனங்கண்டேனே

௬௮ இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வந்தனஞ்சொல்வாய் மானே
வளைசூழ்போரூர்த் துரைவேலர்க்கு

அநுபல்லவி.

அந்தரங்கமாக என்தன்முன்னேநின்று
சொந்தம்பாராட்டிய கந்தசாமிக்கின்று
வந்தனஞ்சொல்லாய்

[சரணங்கள்]

கொஞ்சுங்கிளியிவ ளென்றெண்ணிப்பார்க்காமல்
கொக்கோகலீலைசெய் தென்குறைதீர்க்காமல்
வஞ்சித்தவளுடன் கொஞ்சுவானைத்தேடி
ரஞ்சிதபாதத்துக் கஞ்சலென்றேகோடி
வந்தனஞ்சொல்வாய்

ஏதுமறியாத என்னைக்கண்டேநிதம்
எத்திஎத்தியென் சித்தங்களைத்தேயிதம்

ஒதிவிட்டுப்போன சேதிமறந்தாரோ
சோதனையோஇதென் ஞாநனுக்குநேரோ
வந்தனஞ்சொல்வாய்
பத்தன்குப்புசாமி சொன்னபதம்பாடிப்
பாங்கியேயவர்க்குச் சொன்னதுண்டுகோடி
அத்தனையும்வீண்செய் சித்தமையல்தீரச்
சத்திவேலேந்திய கர்த்தனெனைச்சேர
வந்தனஞ்சொல்வாய்

---

எ௰-இராகம்-கரிகரப்பிரியா-தாளம்-சாப்பு.

பல்லவி.

வருவாரடியன்னமே உன்தனைச்சேர
வருவாரடியன்னமே

அநுபல்லவி.

குருவாய்வந்தெம்மை யாளும்போரூர்நாதன்
கூடிமருவும்வள்ளி கோலாகலவிநோதன்
வருவாரடி

[சரணங்கள்]

மங்கையர்க்கரசேகேள் வடிவேலனைக்கண்டேன்
வந்தனஞ்சொல்லிட மனமிகமகிழ்கொண்டேன்
செங்கைபிடித்திந்த சேதியைநீசென்று
தெரியச்சொல்லிப்போதே வருவேனென்றுரின்று
வருவாரடி
மஞ்சனமாடி மையிட்டுப்பொட்டிட்டு
மாங்குயிலேயிளங் கொங்கைக்குக்கச்சிட்டு
வஞ்சிக்கொடியிடையில் வர்ணத்துகில்புனைந்து
வயிரப்பணிதிருத்தி மாதேயுனைநினைந்து
வருவாரடி
கட்டிலின்மேல்ரவை சல்லாவிரித்துக்
காமனுங்கண்டுளம் நாணஅலங்கரித்துச்
சட்டமுடனேகுப்பு சாமிபதத்தைப்பாடிச்
சந்தேகமேற்றிரு உன்தனில்பத்தைநாடி
வருவாரடி

## திருப்போரூர்கந்தசாமி-கொம்மி.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கொம்மிஅடித்துப் பாடுவீர்
குமரனைக்கொண் டாடுவீர்

அநுபல்லவி.

நம்மைக்காக்கமயி லேறிவருவானை
நாதாந்தமீதில் நடிக்கும்போரூரானைக்

கொம்மி

[சரணங்கள்.]

சரவணப்பொய்கைநீ ராடியே
சாதிமுல்லைமலர் சூடியே
அருளிஷ்ட்டசித்திவி நாயகமூர்த்தியை
அஞ்சலித்துக்கண நாதன்கீர்த்தியை

கொம்மி

பொன்னின்துஜஸ்தம் பத்தைத்தொடுத்துப்
போற்றிமயில் மண்டபத்தையடுத்துச்
சொர்ன்னக்கோபுர வாயிலில்நுழைந்து
சூரியனைப்பணிந் துள்ளங்குழைந்து

கொம்மி

தெய்வானைவள்ளி சமேதனைப்பார்த்துச்
சிந்தித்துச்சிந்தையிற் றுயரந்தீர்த்து
மெய்வாய்பொறியைத் தையும்வென்றுவந்து
வேலவன்கோயிலைச் சூழ்ந்துவலம்வந்து

கொம்மி

நீண்டசேல்விழி மாதர்களேசென்று
நெஞ்சங்கனிந்துநா மவன்முன்நின்று
வேண்டும்வரம்பெற வணங்கியேத்தி
வேம்படிவிநா யகனைப்போற்றி

கொம்மி

கூந்தல்மலர்மாலை யாடவே
கூட்டுவ்வண்டுசுதி கூடவே
காந்தளங்கைவளை தளதளென்னக்
கட்டுஞ்செம்பொற்சேலை பளபளென்னக்
கொம்மி

கொங்கையிரண்டுங் குலுங்கவே
கொவ்வைச்செவ்வாய்நகை யிலங்கவே
எங்கள்பாலாம்பிகைக் கேற்றவினோதனை
எந்தைதியாககை லாசநாதனை
கொம்மி

திருவளருமை பாகனார்
திங்கள்சடைக்கங்கை மோகனார்
தரவருமுரு கையனைத்தாவிச்
சததளமலர் பதத்தில்தூவி
கொம்மி

தேனுந்தினைமாவுக் காசைகொண்டு
தினைப்புனத்தினில் வள்ளியைக்கண்டு
கானக்குறமக ளென்றெண்ணிப்பாராமல்
கலந்தகோலனை மனஞ்சோராமல்
கொம்மி

சைவப்பயிர்வளர்த் தோங்கவே
சகலவினையும் நீங்கவே
தெய்வயானையம்மை மருவுந்தோளனைச்
செந்திருமார்பன் புகழுங்கண்ணாளனை
கொம்மி

தேவாதிதேவரும் வாழ்கவே
'சிதம்பரசாமி வாழ்கவே
பாவால்திருப்பு சாமிபதம்பாடிப்
பரமானந்தகுரு பதத்தைத்தேடி
கொம்மி

## லாலி.

இராகம்-நவரோஸ்-தாளம்-சம்பை

திருமருவுசமரபுரி தேவர்தொழுந்தீபா
தெய்வானைவள்ளிமகிழ் திவ்வியசொரூபா-லாலி

பார்புகழுந்திருஞான சம்பந்தநாதா
பார்த்தன்வில்லடியுண்ட பரனருள்பிரக்கியாதா-லாலி

மலையரசனீன்றெடுத்த மாதேவிமைந்தா
மாசிலாச்சித்தொளியை வந்தருள்செய்கந்தா-லாலி

ஆறுதிருமுகமுமீ ராறுடையவாகா
அயிலேந்திஅவுணர்குல மழித்ததிர்வாகா-லாலி

சொர்னமயிலேறிவரு சுந்தரவிலாசா
சோதிவடிவானகும ரேசவிஸ்வாசா-லாலி

அடிமைகுப்புசாமிதனை யாளுமுத்துசாமி
ஆனந்தசிவயோக ஆறுமுகசாமி-லாலி

---

## எச்சரிக்கை.

இராகம்-எதுகுலகாம்போதி-சம்பை

பல்லவி.

எச்சரிக்கை எச்சரிக்கை ஈசனருள்குகனே
எச்சரிக்கை எச்சரிக்கை எங்கள்சண்முகனே

அநுபல்லவி.

பச்சைப்பசுங்கலபமிசை பவனிவரும்போரூரா

எச்சரிக்கை

[சரணங்கள்.]

அரனுதற்கண் ணுதித்தோனே
ஆனந்த புருகோனே

பிரமன்தொழும் பெருமானே
பேரின்பத் தேனே
எச்சரிக்கை

ஜெயசூர சம்ஹாரா
திவ்வியநவமணி ஆரா
அயிலேந்துங் கெம்பீரா
அம்பிகை குமாரா
எச்சரிக்கை

சுப்பிரமண் ணியநாதா
தொண்டர்புகழ் பிரக்கியாதா
குப்புசாமி பணிபாதா
குறமகள் விநோதா
எச்சரிக்கை

---

## மங்களம்.

இராகம்-பந்துவராளி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மங்களம்-சுப்பிரமணியனே-ஓம்-ஹர-ஹர-சுப
மங்களம்-சுப்பிரமண்யனே

அநுபல்லவி.

மங்களஞ்சுப்பிரமண்ய வானுளோர்கள்போற்றுகண்ய
அக்கப்பெண்ணுருவாக்கும்புண்ய அளவில்சோதிரூபலாவண்ய
மங்களம்

[சரணங்கள்.]

சங்கரன்அருளும் பாலனே-மாதேவிமகிழும்
சண்முகாவள்ளி லோலனே

செங்கையயில்வே லேந்திஅந்த
தேவரிடுக்கண் தீர்க்கவந்த
அங்கமுனிவ ரோதுங்கந்த
சுவாமியடிமைக் கருள்சப்பந்த

மங்களம்

அருணகிரியார் தமிழ்க்குதாரனே-நக்கீரற்குவந்தே
அடல்கொள்பூதத்தை வென்றவீரனே
கருணைசெய்யும் போரூரானே
கதிக்குந்தெய்வ யானைமானே
மருவும்பன்னிரு புயங்கொண்டோனே
வந்தெனுளத்தி லினிக்குந்தேனே

மங்களம்

மரகதமயி லேறும்பாதனே-குப்புசாமி
வாழ்த்தித்துதிக்குஞ் சாமிநாதனே
சரவணோற்பவ னெனுமுத்தையனே
சதுர்முகன்சிறை விடுக்குமெய்யனே
விரைவில்வந்தெனை யாளுந்துய்யனே
வேண்டும்வரந்தரு முருகையனே

மங்களம்

## வாழி.

எழுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.

மறைமுதற்பொருளே யுருவமாம்போரூர்
வளரும்வேம்படிவிநாயகருங்
குறைவிலாவமுதக் குன்றெனவிளங்கிக்
குவலயமளித்தமாதேவி
இறைவனும்வாழி யிமையவர்வணங்கி
யேத்தவந்தருள்திருமுருகா
சிறைமயில்வேல்குக் கிடமுமான்மகளுந்
தெய்வகுஞ்சரியுநீவாழி.

உ

சிவமயம்.

திருப்போரூர்-பிரணவகிரி

# தியாககைலாசநாதர்பதிகம்.

எழுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.

திருமருவுமானந்த வாவிநீராடிவெண்
டிருநீறுமெய்யிலிட்டுச்
சிவசாதனந்தரித் தனகுசந்நிதிவலஞ்
செய்துதெரிசித்துநின்று
மருமலர்க்கூவிளங் கொண்டருச்சித்திரு
மலர்ப்பதம்பாடியாடி
வாழ்த்தித்திருத்தொண்டு செயவெண்ணினேனித்த
வரமெனக்கருள்செய்வேத
ஒருமுதல்வனியெனப் புத்தனைமுன்வாதில்வென்
றூமையைப்பேசுவித்த
உண்மைமிகுமாணிக்க வாசகர்க்குபதேச
மோதியமெய்ஞ்ஞானகுருவே
கருமலமகன்றுவினை யொத்துநிலைபெற்றுளோர்
கைதொழுஞ்சமரபுரிவாழ்
கருணாகராபிரணவ பரிபூரணவிபவ
கைலாசநாதசிவமே. (௧)

ஊனுருமுடலாகி யுயிரினுக்குயிராகி
யுணர்வாயவ்வுணர்வினுக்குள்
உலவிநிறையானந்த மயமாகிமாமந்திர
வோங்காரமாகியருள்கூர்
தேனுகியினிதான சினிகற்கண்டாய்த்
தெவிட்டாததெள்ளமுதயாய்த்

சித்தித்தெழுந்தநவ ரசசுகசொரூபமே
சித்திரரத்தினதீபமே
தானாகியாவுந் தனக்குநிகரில்லாத
தன்மையாஞ்சாக்ஷிநீயே
தயைசெய்தென்முடியிலுன் றாண்மலரிருத்தியித்
தமியேனையாள்வதென்றோ
கானார்குறத்திமண வாளனைப்பெற்றவா
கனசமரபுரியில்வாழ்வே
கருணாகராபிரணவ பரிபூரணவிபவ
கைலாசநாததசிவமே. (உ)

உனதுசெயலில்லாம லொன்றுநடவாதென்னு
முண்மையோசிக்காமலென்
ஊனத்தைச்சரீரத்தை மெய்யாகநம்பியிவ்
வுலகவெறிகொண்டுமேன்மேல்
சினமதுமிகுந்துபாழ்ந் தீவினைக்காளான
சிந்தனையொர்வழிபடாமல்
தீரமொடுயானெனு மகந்தையுட்சிக்கித்
திரிந்தூநதற்செய்கையின்றி
எனதுசெயலெனதுபொரு ளெனதுமனையெனதுகிளை
என்மக்களென்றுசொல்லி
எண்ணாதுமெண்ணுதே யேழைமனமென்செய்வே
னிதுதடுத்தெனையாள்வையோ
கனகமயசித்திரகோ புரநிரைபொன்மலையெனக்
காணெழிற்சமரபுரிவாழ்
கருணாகராபிரணவ பரிபூரணவிபவ
கைலாசநாதசிவமே. (௩)

மரமாமுளைத்தாலு மொருதுன்பமில்லாமல்
மாமுனிவர்கூட்டமெல்லாம்
வந்துகுடிகொள்வரத நாற்புண்யமேலிட்டு
வந்திடும்பாவம்நீங்கும்

பரமாகவெந்நதிறை கின்றநின்பாதமேற்
பழவடியரர்ச்சிக்கவே
பத்ரவடிவாகியே முத்தியைச்சொற்பமாய்ப்
பண்புடன்பெற்றுய்யலாம்
திரமானமானிடத் தேகமதெடுத்துநற்
செய்கைசற்றேனுமின்றிச்
சிற்றின்பபோகமே முற்றின்பமாகினல்
திருவருள்கிடைப்பதென்றோ
காமானுமழுவேந்து மெய்யனேதுய்யமணி
கண்டனேசமரபுரிவாழ்
கருணுகராபிரணவ பரிபூரணுவிபவ
கைலாசநாதசிவமே. (௪)

பெற்றநின்பிள்ளையைக் கைவிடுதல்ஞாயமோ
பிழைபொறுத்தாளாமலே
பேசாதிருக்கினுவ கேசிடாதோவுனது
பெருமைக்கிதழகாகுமோ
சற்றேனுமிதயகா ருண்யமில்லையோபடுஞ்
சஞ்சலமெலாமெடுத்துச்
சந்ததஞ்சாற்றிமுறை யிட்டிடினுமெங்குறிறை
சாமிநீயறியாதபோல்
முற்றுமிப்படியிருந் தாலுதவுவார்களெவர்
மூதாதையேதாதையே
மூவர்மொழிசெவியேற்று ளுருகுமாதேவனே
முதல்வனேமுறைநாலெலாங்
கற்றவர்களுறவிலா நாயினேனுதலாற்
காத்தருள்செய்சமரபுரிவாழ்
கருணுகராபிரணவ பரிபூரணுவிபவ
கைலாசநாதசிவமே. (ரு)

நாமமுருவற்றநானுனென்றுடஞ்ஞான
நாட்டமற்றிந்திரஜால

நானாவிகாரமா யாபேதமற்றோங்கு
    நாதாந்தமீதார்ந்தெழுஞ்
சோமமதிமண்டலப் புத்தமுதமுண்டுட்
    சுகித்துநிறையின்பவெளியிற்
றொந்தமாமம்மைகுண் டலிபரஞ்சோதியிற்
    றோய்ந்துபற்றற்றுநாளும்
வாமமுனிகும்பமுனி முதலானமாதவர்கள்
    வாழ்ந்தனர்களென்றுநாலா
மறையெடுத்தோதியுமொ ரணுவளவுமுணராது
    மண்ணாசைபெண்ணாசையாற்
காமமுற்றழிவதே நிலையெனவுநப்பினேன்
    கருணைபுரிசமரபுரிவாழ்
கருணாகராபிரணவ பரிபூரணாவிபவ
    கைலாசநாதசிவமே. (சு)

பொல்லாதவினையெலாம் வந்துவந்தேறித்தம்
    போராட்டமிட்டாட்டுதே
பொறுத்தற்கென்னான்முடியு மோவதனையம்மம்ம
    போக்கியெனையாள்வதற்கே
எல்லாமறிந்ததிற் கென்னென்றுசொல்லுவேன்
    யாதுநீயறியாததோ
எப்பொழுதுமிறவா திருக்கவுங்கேட்கில
    இருக்கும்வரைநோயிலாமல்
நல்லாரிணக்கமொடு நேசித்திருக்கவும்
    நாவாலுனைப்பாடவும்
நாயினேன்கேட்கும்வர மீதொன்றுதான்வேறு
    நானாவிதங்களில்லை
கல்லாதவறிஞனுக் கருளுவாய்மெய்ஞ்ஞான
    காருண்யசமரபுரிவாழ்
கருணாகராபிரணவ பரிபூரணாவிபவ
    கைலாசநாதசிவமே. (எ)

அரிதானமானிடச் செனனமதெடுத்துமத
னுலடைவ தோர்ந்துநெஞ்சம்
அனாதிமிஷிமாயினு நினைந்துதுதிசெய்யா
தலைந்தலைந்தோடிவாடி
விரிவானபந்தமதில் வீழ்ந்தெந்தநாளுமே
வினையுழன்றுமுடிவில்
வெந்துபிடிசாம்பலாய்ப் போதனன்றேநின்னை
மிகநம்பினேனம்பினேன்
பிரியாதருட்புணை கொடுத்தளவிலாவெழு
பிறப்பெனுங்கடல்கடத்திப்
பேரின்பமாங்கரையி லேற்றியினியாகிலும்
பேயேனைரக்ஷிகண்டாய்
கரிமாமுகத்தனைப் பெற்றமாதேவனே
கதிதருஞ்சமரபுரிவாழ்
கருணாகராபிரணவ பரிபூரணவிபவ
கைலாசநாதசிவமே· (௮)

ஆத்திமதிகங்கைமுடி மாதேவனேசிவா
னந்தனேவேதாந்தனே
ஆலினிழனால்வருக் கருள்பரஞ்சோதியே
ஆதியேமனுநீதியே
சாத்திரபுராணம்அறு பத்துநாற்கலையிற்
றழைத்தோங்குசிற்சொருபமே
சண்மதத்தவருமுண ராக்காக்ஷியேசுத்த
சைவசித்தாந்தமயமே
ஒத்தியடிதொழுமன்ப ரிதயவாரமுதமே
எண்குணநிறைந்தவொளியே
இமாசலகுமாரிமண வாளவெண்டோளனே
எல்லைத்தடுத்துவந்து
காத்தளித்தாள்வாய் தயாளபொற்றாளனே
கடிமதிற்சமரபுரிவாழ்

கருணாகராபிரணவ பரிபூரணாவிபவ
கைலாசநாதசிவமே. (கூ)

பாலசந்திரஜடா மகுடதற்பரவாம
பாகம்படர்ந்துவளரும்
பாலாம்பிகைத்தேவி அம்மையுடனேயடற்
பால்வெள்ளைவிடையிலேறிச்
சீலஅடியாரெலாம் சிவசிவாசிவவெனத்
தேவர்பூமழைபெய்யவும்
சித்தகணநாதர்அஞ் சலிசெய்துபோற்றவும்
சிவயோகர்தியானிக்கவும்
மாலயனும்இருபுடை வணங்கிப்பராவவும்
வருநின்திருக்கோலமே
மதியிலேன்கண்ணினாற் கண்டுய்வதென்றுகாண்
மார்க்கண்டருக்காகமுன்
காலனையுதைத்தருள்செய் காலனேசூலசங்
கரானேசமரபுரிவாழ்
கருணாகராபிரணவ பரிபூரணாவிபவ
கைலாசநாதசிவமே. (ய)

முற்றுப்பெற்றது.

---



உ

சிவமயம்.

# திருப்போரூர்

# கந்தசாமிபதிகம்.

எழுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.

கருணைவளர்சண்முகமு மீராறருட்கணுங்
கனியருண்மகிழ்திலதமுங்
கனகமகமேருநிகர் புயவாகுவலயமுங்
கதிர்விடுமதாணிமார்பும்
அருணரவிகிரணசங் கனகராம்போருகத்
தார்ந்தவடிவேலுமிடைமேல்
அணிந்தசெம்பட்டாடை யுஞ்சுருதிவார்சிலம்
பார்க்குமிருபதமுமந்தக்
காணமொருவழியில்நின் றருகவறிவாய்ப்பசுங்
கலபமாயூரமேறிக்
காதலிருமாதரொடு நீயெழுந்தருளநான்
கண்டுகைகுவிப்பதென்றோ
முரணைந்தவத்தைக டணந்துமுருகாவென்று
முனிவர்துதிசமரபுரிவாழ்
முத்திக்கமாறவரு முத்தர்க்குளேயமரு
முத்துக்குமாரகுருவே (க)

தேவர்சேனாபதி பாவனாதீதமோன
தேசோமயானந்தமே
சிவபோகசாரமே தவயோகிபோகமே
தெய்வமேசைவமடமே
யாவரையுநின்றுகாத் தருண்மந்திரமூலமே
[illegible]

எந்தையேகந்தனே வள்ளிதெய்வானைநித
மெண்ணும்யௌவனசொரூபனே
தாவடிமயூரவாகனசடானனசடா
க்ஷரசடாதாரதீப
சகளநிஷ்க்களதத்வ மூலமாயாரகித
சரவணோற்பவவிலாச
மூவர்மகிழ்செல்வமே யெனையருள்வதுன்பார
முதல்வனேசமரபுரிவாழ்
முத்துக்கமாறவரு முத்தர்க்குளேயமரு
முத்துக்குமாரகுருவே. (உ)

என்னநான்சொல்லியு மொன்றுநீபேசா
திருப்பதுந்தருமமாமோ
ஏதுநீயறியாத தியாதறிகுவேனெளிய
னென்றென்றிலாதெடுத்துச்
சொன்னதோஅளவில்லை யின்னமுங்கேளாமல்
சும்மாவிருந்தாலினிச்
சொந்தமெனநினைவிட வணைத்தாளுகின்றபேர்
தொல்லுலகில்எவனையனே
மன்னவாபொன்னவா மண்ணவாபெண்ணவா
மாற்றுசிவராஜயோக
மார்க்கத்தினின்றுதீர்க் காயுள்பெற்றோங்குபெரு
மாதவர்களேத்திபமுக
முன்னவர்க்கிளையவா பொன்னகர்க்கதிபனே
மூர்த்தியேசமரபுரிவாழ்
முத்துக்கமாறவரு முத்தர்க்குளேயமரு
முத்துக்குமாரகுருவே. (௩)

ஆகமவிதிப்படி வணங்குகதிர்வேலநின்
னடியர்களிலொருவனல்லேன்
அறுதினம்பத்திநெறி நிலைநின்றுபெரியர்மா
னடிமலர்த்தொழுதவனலேன்

ஏகபரமானசிவ யோகியர்களேவுமோ
ரேவலைச்செய்தவனலேன்
என்றுதெலாமெண்ணி யெண்ணிமேன்மேலுமுரு
கேசனேபாசபந்த
தேகவபிமானமயல் கொண்டேயிவ்வுலகினிற்
திரியுமதைவிட்டுநாளுஞ்
சித்தமொருவழியினின் றணுதிமிஷமேனும்யான்
சிந்தனைபுரிந்திடாத
மூகனேனுதலாற் பாதுகாத்தருள்திரு
முராரிமகிழ்சமரபுரிவாழ்
முத்துக்கமாறவரு முத்தர்க்குளேயமரு
முத்துக்குமாரகுருவே. (௪)

பொன்னைவிடவேறுபொரு ளில்லையென்றேடியே
புகலுமொருவேளையின்னிற்
பொய்யானபோகத்தை மெய்யாகநம்பியது
போற்றிடுஞ்சிலசமையமே
என்னைவிடவொருசெயலு மில்லையென்றேமிகவு
மிறுமாந்திடுந்திருந்தா
தெப்போதுமஞ்ஞான மெய்ப்போர்வைமீதுகொண்
டேங்கியேயுழல்வதல்லால்
நின்னையொருகணமேனு நினையாதுநினையாதென்
னெஞ்சமென்செய்வெனம்மா
நின்றிடெய்திதனைநின் பொன்னடியில்வைத்துருக
நீகருணைசெய்வையாகில்
முன்னைவினைசிறிதுமென் முன்னம்வந்தணுகுமோ
முருகனேசமரபுரிவாழ்
முத்துக்கமாறவரு முத்தர்க்குளேயமரு
முத்துக்குமாரகுருவே (௫)

அளவிலாச்சென்மமதில் மானிடச்சென்மமே
யருமையென்றறியாமல்

அகமதிற்றுயருறும் சம்சாரபந்தமதில்
ஆழ்ந்துவீணுள்போக்கியே
களபமணிகச்சிறுக்குங் கொங்கைமங்கைமார்
கண்ணம்புபாய்ந்துபுண்ணுய்க்
கவலைகொண்டுழல்வதே தொழிலெனக்கருதுமிக்
கசடனேனுய்யவசமோ
பளபளென்றொளிவிடும் வடிவேலினாற்பெரும்
பாறையைப்போழ்ந்தெறிந்து
பைந்தமிழ்க்கீரன்முதலோர்கள்சிறைநீக்கியே
பாதுகாத்தருள்புரிந்த
முளரியம்பாதனே யாகமவிநோதனே
முத்தனேசமரபுரிவாழ்
முத்துக்கமாறவரு முத்தர்க்குளேயமரு
முத்துக்குமாரகுருவே. (௬)

ஊழின்வினைப்படி நடக்குமானல்மெலிந்
துன்றனைத்தெய்வமென்றே
ஓலமிட்டலறிடும் பேயனுனெவ்வகையி
லுய்குவேனுதலாற்சீர்
காழியிலுதித்தளவில் ஜீவராசிகளெலாங்
கரையேறவிட்டதேவே
கருணையொடுவாவென்றுன் னடியென்முடிசூட்டியங்
கைகாட்டிமுடிவில்பிறவி
யாழியில்விழாதெடுத் தாளுவாயெந்நாளும்
ஆறுமாமுகவேலவா
அலைகடலையசுரர்சுரர் பாழிவாசுகிநாணி
யார்த்துமுன் மந்தரகிரி
மூழியாற்கடையவெழு மமுதளித்தோன்மருக
முன்னருஞ்சமரபுரிவாழ்
முத்துக்கமாறவரு முத்தர்க்குளேயமரு
முத்துக்குமாரகுருவே. (௭)

அரிமுதற்கமலால யத்தன்மகபதிதேவ
ரனைவருமொருங்குகூடி
யணிமருவுகயிலைவந் தனதுதாள்நீழலை
யடைந்துமுறையிட்டுவேண்டக்
கரிமுகத்தாருகன் சிங்கமாமுகன்வச்சிர
கவசமருமச்சூரனைக்
காய்ந்துபுகழ்விருதுகொண் டேயந்தவும்பரைக்
காத்தவல்லாளனன்றே
திரிவிதமலங்களெனை விட்டிடோமென்றருள்
செய்திகழ்ந்திங்குன்னையுஞ்
சேரவொட்டோமென்று போராடுகின்றதென்
செய்குவேன்பொய்மையாகி
முரிதலில்லாவதன் வலிசிதைத்தருள்வள்ளி
மோகனேசமரபுரிவாழ்
முத்துக்குமாரவரு முத்தர்க்குளேயமரு
முத்துக்குமாரகுருவே. (அ)

அரகராவென்றுதுதி புரியாதநாவுமுனை
யஞ்சலிசெயாதகையும்
ஆனந்தவடிவினைக் காணாதகண்ணுமா
லயம்வலம்வராதகாலும்
சரவணதடாகநீ ராடிவெண்ணீறது
தரித்திறைஞ்சாத்தேகமும்
சந்ததமுமுன்னாத சிந்தையுமவர்க்குநீ
தந்தவாறென்னென்றலர்ப்
பிரமனைவினவியிப் படியமைக்காதவகை
பேசியினிபிழைபொறுத்துப்
பிரணவசொரூபநின் மயவுருவளித்தெனைப்
பேரின்பவீட்டில்வைப்பாய்
முரசமுதல்சர்வவாத் தியமுமலைவாரியின்
முழங்கெழிற்சமரபுரிவாழ்

முத்துக்கமாறவரு முத்தர்க்குளேயமரு
முத்துக்குமாரகுருவே. (௯)

பஞ்சபூதம்பொறி புலாதிகரணத்தினிற்
பழகியேபலவழிகளிற்
பாய்ந்துமனமோடாம னடுநாடியுடனே
படர்ந்தாறுவனைகடந்து
விஞ்சுமுச்சுடருமொன் முய்விளங்கும்பர
வெளிக்குள்ளுழைவுற்றங்ஙனே
விளைகின்றபோதங்களைந்துபரமானந்த
வெள்ளந்திளைத்துன்னிரு
செஞ்சரணகஞ்சமலர் தஞ்சமெனவேசிந்தை
சும்மாவிருக்கமகிழ்கூர்
செந்தமிழகத்தியர்க் கருணகிரியார்க்குயர்
சிதம்பரசுவாமிக்கருள்
முஞ்சுதலிலாதசஞ் ஜீவிசமநியகரணி
முதுமலைச்சமரபுரிவாழ்
முத்துக்கமாறவரு முத்தர்க்குளேயமரு
முத்துக்குமாரகுருவே. (௰)

முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்

# திருப்போரூர் கந்தசாமிபதிகம்.

குறுங்கழிநெடில் விருத்தம்.

முருகாவுனதாயிரநாமங்களை மொழிந்தேபரவசமாய்
அருகேநின்றெந்நாளும்போற்றி யடியேனுனைப்பாடக்
குருவாய்வந்திங்கருள்வாய்என்றன் குற்றம்பாராதைந்
தருவோடுறவுசெய்யும்பொழில்சூழ் சமராபுரியானே. (௧)

கண்ணேபன்னிருகண்களிலேயொரு கண்ணால்நீபார்த்தால்
நண்ணேனென்றக்கணமும்மலவினை நாடாதோடாதோ
என்னேனினியொருதெய்வங்களையு மிதுசத்தியமையா
தண்ணேர்கமலப்பூம்பழனஞ்சூழ் சமராபுரியானே. (௨)

காலன்வந்திங்கென்செய்வானின் கழலிணையென்முடியின்
மேலன்பாய்வைத்தருள்செய்தால்வடி வேலாமறைமூலா
பாலன்றனக்கோர்துணையில்லைபன்னிரு கண்ணாவிண்ணாடர்
தாலந்தவமுனிவோர்கள்வணங்குஞ் சமராபுரியானே. (௩)

ஆனந்தமாகியசரவணப்பொய்கையி லன்புடன்குடைந்தாடில்
வானந்தமெய்ப்பரிபூரணநிலையை மகிழ்ந்தேகாட்டாதோ
ஏனந்தநெறியறியாதுழல்கின் றாரிவ்வுலகத்திருப்போர்
தானந்தமாஞ்சிவசண்முகனேயருள் சமராபுரியானே. (௪)

முனமேவாவென்றழைத்தாலுன்பத முளரியடைந்திடவென்
மனமேநான்சொல்வழிகேளாதிம் மாநிலமுழுதோடி [ந்
இனமேயலைந்தால்என்செய்வேனிதை யென்வசஞ்செய்யெனில்வ
தனமேசெய்வேன்சரவணபவனே சமராபுரியானே (௫)

செந்தாமரையோனந்தார்கரத்தோன் தேவேந்திரன்வானோர்
எந்தாய்சிந்தையிடர்தீர்த்தாள்வா யென்றேநின்றேத்த
வந்தாதரித்தேசூரனைவாட்டி வாழ்பதமதிகாரந்
தந்தாயவர்க்கேயென்றுனையடைந்தேன் சமராபுரியானே. (௬)

ஆரா்வமுதேயயில்வேலரசே ஆறுமுகத்தோனே
நீராயுருகிநெஞ்சங்கரைந்து நெக்குநெக்காவுன்
பேராயிரமுமெடுத்தேயேத்தப் பெருமானேநீபத்
தாரார்புயனேவாராயென்முன் சமராபுரியானே. (எ)

கூகாவென்றேசுற்றத்தார்கள் கூடிக்கூவாமல்
காகாவெனயேதெய்வயானை கானக்குறவள்ளி
பாகாமுருகாகுமராகுகனே பரந்தாமன்மருகா
சாகாவரமேயடியார்க்கருளும் சமராபுரியானே. (அ)

முழுதும்பொய்யேபேசும்மடவார் மோகவெறிகொண்டு
பழுதேசெய்துதிரிவேனைக்கண் பார்க்கலாகாதோ
தொழுமந்தணர்கள்செய்யும்வேள்வித் தூமப்புகையண்டம்
தழுவிக்கூடிக்கொண்டல்மணக்கும் சமராபுரியானே. (கூ)

வேதாகமத்தின்பொருளேயருளே விண்ணோர்பெருமானே
வாதாவின்னம்வந்தெனையாள்வாய் மயில்வாகனவேலா
போதாநந்தப்பரஞ்சுடரோபரி பூரணனேகுருவே
தாதாவெனவேகேகயமாடும் சமராபுரியானே. (ய)

குறுங்கழிநெடில் விருத்தம்.

பொன்னின்மணியேசதுர்மறையின் பொருளேயருளின்பூரணமே
உன்னையலதோர்துணையறியா துவந்துன்றிருச்சந்நிதிவந்தே
என்னவுரைத்துங்கேளாமல் இருப்பதும்நின்னருட்கழகோ [னே
அன்னேயெனதுபிழைபொறுத்தே ஆண்டருள்போரூராண்டவ

பாடும்பணியேபணியாகப் பாடித்துதிக்கும்பழவடியார் [தே
தேடுங்கருத்தின்மெய்ஞ்ஞானச் செந்தேன்தெளிவேசிவக்கொழுந்
வாடும்பிணியால்வாடாதுன் மலர்ச்சேவடியைப்பணிந்தேத்த
ஆடுங்கலபமயின்மேல்வந் தாண்டருள்போரூராண்டவனே. (உ)

சத்துச்சித்தானந்தமயந் தானேஜெகஜீவபரமென்
றொத்திங்குணர்வாய்ப்பூரணமாம் ஓங்காரத்தின்பேரொளியே
முத்தின்னகையார்மோகத்தில் மூழ்கியலைந்தேதிரிவேனை
முத்திமுகத்தோர்க்கினியோனே ஆண்டருள்போரூராண்டவனே

பூதரவில்லோன்திருமகனே பொன்மருமத்தவன்மருமகனே[னே
காதணிபன்னிருகுழையோனே கருணைசெய்பன்னிரு விழியோ
மாதர்களிருவோர்மோகனனே மரகதகேகயவாகனனே
ஆதரவாமிதுதநியெனையே ஆண்டருள்போரூராண்டவனே. (ச)

ஞாலம்படைத்தவேதனுக்கும் நாரணனெனுமதுசூதனர்க்குங்
காலன்றனக்குதொழிலுளதோ கடையேன்பொருட்டின்னமுமை
யா,சீலந்தந்துன்னருளூட்டித் திருச்சேவடியென்முடிசூட்டி
ஆலங்குடித்தோன்தேசிகனே ஆண்டருள்போரூராண்டவனே(ரு)

வில்லாலடியுண்டவன்பெற்ற விமலாஅமலாஉமைபாலா
பொல்லாவினையைம்புலவேடர் பொய்க்குட்சிக்கிச்சொக்காமற்
சொல்லாரமுதத்தமிழ்மாலை தொடுத்தேத்தெடுப்பநின்னருளை
யல்லால்வேறோர்வழியுண்டோ ஆண்டருள்போரூராண்டவனே(

மெய்யேவந்துன்னடிநிழலை வேட்டுவேட்டுள்ளுடல்விதிர்த்தல்
செய்யேனிருகண்ணீர்சொரியத் தேகம்பூரித்துண்மகிழேன், (ன்
பொய்யேனுய்யும்வகையிலனோர்பொருளல்லாதேனென்செய்கே
ஐயாவினியுன்னருட்கண்பார்த் தாண்டருள்போரூராண்டவனே()

குருவாய்கும்போற்பவமுனிக்குக் குணபூதரந்தந்தளித்தோனே
மருவார்கூந்தற்றெய்வானை வள்ளிமகிழும்மணவாளா
வருவாயோவென்வினைதீர்க்க வரதாமுருகாவடிவேலா
அருவாயுருவாயமர்ந்தோனே யாண்டருள்போரூராண்டவனே()

வேகமயூரமிசையேறி மேதினியோர்நொடிவலம்வந்த
ஏகோராமயசின்மயனே யிந்திரனுக்கருள்தன்மையனே
தேகமெடாதினியுன்னடியில் சேர்த்தாட்கிறியனையிருபானெட்
டாகமவேதபுராதனனே யாண்டருள்போரூராண்டவனே. (கூ)

படைத்தளித்தழிக்கும்பரமேஷ்டி பரமானந்தக்கடலாட்டிக்
கடைக்கண்ணருள்பரவெளிகாட்டிக் கருமலவிருள்நாடாதோட்டிக்
கிடைத்திடற்கரியதிருப்புகழ்நாட்டிக் கேண்மைத்தொண்டர்களுட
ன்கூட்டி,அடைக்கலம்புகுமெனைச்சீராட்டி ஆண்டருள்போரூரா
ண்டவனே. (ய)

## குறுங்கழிநெடில் விருத்தம்.

ஐயனேநினதுசந்நிதிவலம்வந் தணிதருமலர்கொடுவணங்காக் கையனேனெனினுங்கைவிடல்முறைமையாககனதேவாதியர்க்கிரங்கி வையமேல்வைவே லேவிச்சூர்க்குலத்தை மாட்டிச்சீர்நாட்டிநீள் பொதிகைச், சையமாமுனிவர்க்கோதியாள்போரூர்ச் சரவணோற் பவசடானனனே. (க)

இரவொடுபகலுமிடைவிடாதோங்கு மின்பவீட்டளித்தெனைப் புரக்க,விராவில்வந்தடிமைக்கஞ்சலென்றருள்கூர்வித்தகாசுத்தஞா னிகளுள், கரதலநெல்லிக்கனியெனவிளங்குங் கண்ணொருமூன்று டைக்கடவுள், தரவருகுமரபிரணவப்போரூர்ச்சரவணோற்பவசடா னனனே. (உ)

பத்திசெய்திடுநின்னன்பர்தம்புகழைப் பாடிநின்றுனந்தமா ன, முத்தியைக்கருதாதவத்தொழில்புரியு மூடனேனுய்யுநாளுள தோ, அத்தியைமயிலையங்கம்பூம்பாவை யாக்கியஞானசம்பந்தா, சத்திவேலேந்துங்குழகனேபோரூர்ச்சரவணோற்பவசடானனனே

அகமதுவாடும்விதமெனவென்னி லறிவிலாக்கசடனேன்றன க்கும், இகபரமுத்திசாதனமடையு மியல்பினையெடுத்தெடுத்தெடு த்தே, மகிழ்வுடன்குருவாய்வந்துநீயுரைத்துமயல்விடுத்திருந்தில னந்தோ,தகர்மிசையேறுஞ்சேவகாபோரூர்ச் சரவணோற்பவசடா னனனே. (ச)

பதிபசுபாசமூன்றில்மூவிதநற் பசுவினிற்சகலராமயன்மால், விதிவழுவாதுநடத்திருதொழிலும் வெறுத்தொருதொழிற்குளம் வெருவிக்,கதியெனவடையுமன்பர்முன்விரைந்து கருணைசெய்கரு ணைவாரிதிநீ,ததியறிந்தருள்செய்முருகனேபோரூர்ச் சரவணோற்ப வசடானனனே. (ரு)

அராவணிவேணியைங்கரர்க்கிளைய வப்பனேயொப்பிலாதவ னே, பராசரனல்குங்குமாரருக்கருளும் பானுவேவானவர்க்கரசே, பராமுகமாகவிருப்பதேனின்னம் பணியுமென்முகத்தைப்பாராம ல், சராசரமுழுதுந்தொழுந்திருப்போரூர்ச் சரவணோற்பவசடா னனனே. (சு)

வந்தனஞ்செய்தோர்வரம்பெறவேண்டும்வகையினைக்கேளே னுத்தனாப்பேன், சிந்தனைவிடுத்துப்பந்தமேபொருந்துந் தீவினை வேட்டெனதுள்ளம், எந்தநாளிலுமேவருந்துறுதுவத்தான் னிணையடிநிழலில்வைத்தருள்வாய், சந்தனுடவிருழ்ந் தோங்கியபோரூர்ச் சரவணோற்பவசடானனனே. (எ)

எங்களுயகனேகனப்பொழுதேனு மிந்திரியங்குவிந்தொன்றுய்ப், பொங்கிருவிழிநீர்ததும்பியுள்ளுருகாப்புன்மையேனெவ்வணம்பிழைப்பேன், கங்கைவார்வேணிக்கலையெம்பெருமான் களிக்கவந்தவனிடம்வாழுஞ், சங்கரிபெற்றமுத்தமேபோரூர்ச்சரவணோற்பவசடானனனே. (அ)

வஞ்சகனெஞ்சப்புலன்வழிசெல்லு மாலொழித்தேனுமூலத்தில், விஞ்சுமோநாடியெழுப்பிமீதான மேவிமுச்சுடரொடுங்கூடி, எஞ்சுறுவமுதவாரியில்மூழ்கியிருவிதப்பகுப்பற்றேகமதாய்த் தஞ்சமென்றசைவற்றுறவருள்போரூர்ச் சரவணோற்பவசடானனனே. (கூ)

ஆறுமாமுகமும்பன்னிருதோளும் அருமறைச்சிலம்பிருதாளும், ஏறுமாமயிலும்வேலுடைவாளு மெம்மனைமார்வளர்மருங்கும், வீறுமாமாலயயிருள்கெடக்கூவும் விருதுங்கண்டிறைஞ்சவந்தாள்வாய், சாறுநின்வதுவைமுழக்கறுப்போரூர்ச் சரவணோற்பவசடானனனே. (ம)

## அறுசீர்நெடில்விருத்தம்.

திருவளர்மறையின் முடிவுட்டெழுமுதய சின்மயதினகரவொளியே, உருவளர்பவளக்குன்றமேயன்ப ருள்ளத்துட்டெளிந்தசெந்தேனே, கருவளர்மலமாயாகன்மமூன்றுன் கருணைநோக்கெதிர்நிற்பவல்லோ, மருவளர்குழலார்நடம்புரிபோரூர் வாசனேஞானதேசிகனே. (க)

இறைவனேதினதுபதந்தொழுதேத்து மிந்திரன்மகன்முதற்றேவர், சிறையிடைவிளாவிச்சென்றவர்களைவிடு திடம்பெறவருள்

துயதோயென்றலீ, குறையெடுத்துரைத்தும்மனமிரங் கத கோ
தகையென்முன்செய்தவினையோ மறைமுதற்பொருளேயுருவமா
போரூர் வாசனே ஞானதேசிகனே. (ஃ)

தஞ்சமென்றடைவோர்மனத்துயரகலச் சச்சிதானந்தமெய்
வாழ்வை, எஞ்சிடாதளிக்கும்வள்ளலார்குருவே இமையமாமகள்த
ருதிருவே, அஞ்சிவந்தனைக்குஞ்சஞ்சலமகற்றி யருள்நிலைதந்தெ
னைப்புரக்கா, வஞ்சமேனென்மேலென்செய்வேன்போரூர் வாச
னே ஞானதேசிகனே. (ரு)

வெண்மதியணியுஞ்சடைமுடிக்கடவுள் விழிவருசுடர்ப்பராபர
மே பண்மறைமுடிவின்பிரணவம்வினவப் பிரமன்சொலாதுள
மருண்டு, திண்முடிகுலுங்கவவன்றனைக்குட்டிச்சிறைவைத்துச்சிருட்
டிசெய்தளிக்கும், வண்மைகேட்டுன்னையடைந்தனன்போரூர் வா
சனே ஞானதேசிகனே. (சு)

உலகினிற்பிறந்திந்நாள்வரையிலுமே யுண்டுடுத்துழன்றனன
ல்லால், தலைவனேயுனதுசந்நிதியடைந்துன் மூளிணைதுதித்திலன
ந்தோ, பலகலைமுழுதுமுணர்ந்தமாமுனிவர் பரவிநின்றனுதினமே
த்து, மலர்நிறைநந்தவனஞ்செறிபோரூர் வாசனேஞானதேசிக
னே. (ள)

காசிபனளித்தசூரன்செய் துன்பக் கவலைகொண்டுளமதுகலங்
கி, ஈசனேயுன்னைச்சிக்கெனவடைந்த விந்திரன்மகிழ்ந்தரசியற்றத்,
தேசுயர்வடிவேல்விடுத்தவனுரமுஞ் சிரத்தையுந்துணித்தசேவக
னே, மாசிலாவீட்டையெனக்கருள்போரூர் வாசனேஞானதேசி
கனே. (அ)

பொய்யெனுமுடலைக்கருதிநொந் துழன்றைம்பொறிவழிச்செ
ல்லுவதடக்கி, உய்யுநன்னெறிகொண்டுண்முகநோக்கி யொளிதருசு
டரொடுகலந்து, துய்யவானந்தக்கடலிடைமூழ்கிச் சுகம்பெறவை
ப்பதுமுளதோ, வையகமுழுதுய்வலய்வரும்போரூர் வாசனேஞா
னதேசிகனே. (எ)

... ...
விரிடி. (க)

ஞான மவடிவாய்த்தழைத்தெழும்பித்தே நப்படியவருள்ப முத்த, மோனவானந்தமெனுங்கனிரசமே முத்தியெந்களிக்குமா ரமுதே,வானவர்மாதுந்தெய்வகுஞ்சரியுங்கண்டுளமகிழ்செய்கட்ட ழகா, வானநாடவர்பூமழைபொழிபோரூர் வாசனேஞானதேசிக னே. (அ)

முராஹரிமருகாமுருகனேயானைமுகவனுக்கிளையகண்மணியே பராவுநக்கீரன்சொலுமுருகாற்றுப் படைக்குவந்தாயிரம்பேரும்,தி ரமுறப்புதுந் தணிபடச்செகுத்ததேவனேசிறியனேன்வேண,வர முதபெறவந்தருள்திருப்போரூர் வாசனேஞானதேசிகனே. (கூ)

திருப்பரங்குன்றஞ்சீரலைவாய்பொற் சிவகிரியேரகஞ்சிகரப் பொருப்புதோறுடல்சோலைமாமலையாம் பொற்பதியுலவு பூரண னே,விருப்புடன்வெறுப்பும்வந்துதாக்காத வீட்டில்வைத்தென்னை யாள்வேலா, மருப்பிருமதமாவரியுலாம்போரூர் வாசனேஞான தேசிகனே. (ய)

முற்றுப்பெற்றது.

வேலுமயிலுந்துணை.

# திருப்போரூர்ச்சந்நிதிமுறை.

## எச்சரிக்கை.

சீரார்குறமாதுளணிசெப்பார்தனமேவுந் ... ... ... ... *
தாரார்புயசமராபுரிச்சண்முகாவெச்சரிக்கை .. ... ... (௧)

பிறைசூடியசடையானருள்பிள்ளைப்பெருமாளே ... ... *
மறையோர்நிறைபோரூர்வருமன்றுவெச்சரிக்கை... ... (௨

பனிமாமலைமிசைபூத்தருள்பச்சைக்கொடிதந்த... ... ...
கனியேதிருப்போரூர்வருகந்தாவெச்சரிக்கை .. ... ... (

அருமாமறைமுதலோதியவானைக்கொருதுணையே ... ...
பரிபூரணசுகமேபோரிப்பதியேயெச்சரிக்கை... ... ...(

ஆறுவமுதனைபாயயில்வேலாவுயர்வானோர்... ... ... ...*
சேனாபதிசமராபுரித்தேவாவெச்சரிக்கை... ... ... ...(௫

தெய்வகுஞ்சரிகணவாபச்சைத்திருமாறிருமருகா... ... ...
சைவநன்னெறிவளர்போரூர்ச்சண்முகாவெச்சரிக்கை... (௬

வேலாகுணசீலாகனலீலாவிடைப்பாகன்... ... ... ...
பாலாதிருப்போரூர்வளம்பதியாவெச்சரிக்கை ... ... ...(௭

நவவீரர்கள்பணிநூபுரதளினத்திருவடியாய் ... ... ...*
தவர்சூழ்தருசமராபுரிச்சண்முகாவெச்சரிக்கை... ... ... (௮)

சூராறுயர்தோளாதண்டைக்கிணைசந்தபத்மத்தாளா... ... *
சீரார்திருப்போரூர்மயில்வீராவெச்சரிக்கை ... ... (௯

கோழியங்கொடிபடைத்தாய்நல்லகுணத்தாயென்னையளித்தாய்,
வாழியம்மலர்ப்பதத்தாய்போரிவரதாவெச்சரிக்கை ... (௰)

பூவேபரிமளமேமறைப்பொருளேமயிலேறுங் ... ... ...*
கோவேசுரர்தேவேபோரிவாழ்வேயெச்சரிக்கை ... ... (௰௧)

பிரசமேபிரமரசமேதவர்பேசுங்கதிநலமே... ... ... ...
சொருபமேபோரிநகர்வாழ்சுப்பிரமணியாவெச்சரிக்கை...(௰௨

மதுராகுக்கிடவிருதாசிற்சுகவடிவாசுப்பிரமணியா... ... ...*
சதுராதிருப்போரூர்வருசண்முகாவெச்சரிக்கை,... ... ...(௰௩

எச்சரிக்கைமுற்றியது.

படியினுனதினியபுகழ்பரவுமவர்சுகவுதகி ... ... ...*
படிபவினிதருடருமூபாயா ... ... ... *
தடமலரிறெழுகுபிழிதவளவளபருகியுறு ... ..., *
சமரபுரியதனினுறைதூயா ... ... ... (௰)

பெரியகட்டியமுற்றியது.

## சின்னகட்டியம்.

ங்கார்கிளையமகமேரோ- யம்புவிக்கினிமைதருசீரோ... ......*
ங்கரக்கடவுளணைதாரோ - தண்டமிழ்ப்போரிகருகாரோ... ...(௧)

மயமகளுதவுகுணமலேயே-யிதயவனுபவமுனாசெய்கலேயே.*
மயமுழுயதுநிகழுநிலேயே-சனகடலவாருய்வலேய ..(௨)

ர்னியர்க்குரியநாயகனே-கன்னனுக்கினியமருமகனே. ... *
பொன்னகர்ச்சுரர்கணையவனே-புண்ணியப்போரிவாழ்பவனே(

வீரர்பணிபாததேவே - நணிபூதகணநாதர்கோவே ... ... *
மேவுபெரியோர்கள்வாழ்வே-தடமேவுபோரிவாழ்காவே.(௪)

க்கலாபமயில்வீரா- நீபத்துமாமலர்கொடாரா... ... ... *
நாலத்தியாககெம்பீரா-கோதற்றநாதபோரூரா... ... .(௫)

வடியத்தொனித்தசேவலனே -மிகுகொக்கையட்டவேலவனே*
டிமெத்தமெச்சுபாவலனே-பரமற்குஸாத்தநாவலனே.... (௬)

பொன்மாரிபொழிகின்றபுயலே - பொய்யாதவறிஞோர்கள்செய
ல,தென்மாறன்மகிழ்பலகையியலே-செஞ்ஞானசுகம்விளையும்
[வயலே. (௭)

கருணைதருமாறுமுகமதியே -கனதேவர்சேனுதிபதியே... ...*
தருணவளமாருதநிதியே-சமரபுரிவாழ்சுகோததியே... ...(௮)

ரவேள்வெதிடவருசுந்தரா-மாகர்கோனுதவுதெய்வசிந்தூரா..*
கோரர்சூர்ப்பகையையடுதந்திரா -கோதிலாவாறுலியிமந்திரா.()

வலெவெயிலாவீசுகனமே- சுருதடியர்நசையானதனமே......*
சிவன்மருமவணைதுயிலுமனமே- திகழ்போரியடைவோர்களின
[மே. (௰)

சின்னகட்டியமுற்றியது.